Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

கர்ப்பிணி தாய்மாருக்கும், சிறார்களுக்கும்
ஏற்ற போஷாக்கு நிறைந்த
சத்து மா

ஜீவாகாரம்
அண்ணா தொழிலகம்
இணுவில் (சி-1428) T.P.-2223565

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆவணி 16 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றஜப் 04 (02.09.2003) செவ்வாய்க்கிழமை இதழ்: 333

# சுவிஸில் அமைச்சரவை அதிகாரிகளுடன் தமிழ்ச்செல்வன் - கருணா நேற்று பேச்சு!

## அரசியல், பொருளாதார, அபிவிருத்தி விவகாரங்கள் விரிவாக ஆராய்வு

(பேர்ண்)

**வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பான திட்ட வரைபைத் தயாரிப்பதற்காக பாரிஸில் சர்வதேச சட்ட நிபுணர்களுடனான கலந்துரையாடலை முடித்துக்கொண்டு - சுவிற்சர்லாந்துக்குச் சென்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், மூத்த தளபதி கேணல் கருணா உள்ளிட்ட பிரமுகர்கள் சுவிற்சர்லாந்து அமைச்சரவை மட்ட அதிகாரிகளைச் சந்தித்து முக்கிய விடயங்கள் குறித்துப் பேச்சு நடத்தினர்.**

சுவிற்சர்லாந்து நேரப்படி நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு இந்தப் பேச்சுகள் ஆரம்பமாகியதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பேச்சுக்களில் சமகால அரசியல் விவகாரங்கள், வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாகம் தொடர்பான திட்டவரைபு மற்றும் மீள்குடியேற்றம், அபிவிருத்தி, புனர்வாழ்வு உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பில், புலிகளின் தரப்பில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், மூத்த தளபதி கேணல் கருணா மற்றும் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோரும், சுவிற்சர்லாந்து அமைச்சரவை மட்ட அதிகாரிகளும் - இலங்கைக்கான தூதுவரும் கலந்துகொண்டனர்.



சுவிற்சர்லாந்தில் கடந்த ஞாயிறன்று நடைபெற்ற தமிழீழக் காற்று நிகழ்வில் மூத்த தளபதி கேணல் கருணா அம்மான் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

## தோட்டக் கிணற்றிலிருந்து குழந்தை சடலமாக மீட்பு!

(இணுவில்)

இணுவில் தோட்டக் கிணற்றிலிருந்து, பச்சிளங் குழந்தை ஒன்று நேற்று சடலமாக மீட்கப்பட்டது.

இணுவிலிலுள்ள திரையரங்கின் முன் உள்ள தோட்டக் கிணற்றிலிருந்தே இந்தக் குழந்தையின் சடலம் மீட்கப்பட்டது.

தோட்டக் கிணற்றுக்குள் குழந்தையின் சடலம் மிதப்பதைக் கண்ட அப்பகுதி மக்கள் - சுன்னாகம் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தனர். அந்தப் பகுதிக்குச் சென்ற பொலிஸார் - கிராம சேவையாளரின் உதவியுடன் சடலத்தை மீட்டனர்.

மல்லாகம் நீதிபதி சரோஜினிதேவி - இந்தச் சடலத்தைப் பார்வையிட்டதுடன், யாழ்.போதனா வைத்தியசாலையில் சடலத்தை ஒப்படைக்குமாறு, பொலிஸாருக்கு உத்தரவிட்டார். இது தொடர்பான விசாரணைகள் இன்று நடைபெறவுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக எவரும் கைதுசெய்யப்படவில்லை.

(68)

## காங்கேசன்துறை

## சீமெந்து தொழிற்சாலை ஊழியர்களால் மனித உரிமை குழுவிடம் மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் 1990 ஆம் ஆண்டுக்கு முன் வேலை செய்தவர்களில் 152 பணியாளர்கள் ஆட்குறைப்பு என்ற பெயரில் - பணியிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக, இவர்கள் மகஜர் ஒன்றினை மனித உரிமை ஆணைக்குழுவுக்கு இன்று கையளிக்கவுள்ளனர். ஏற்கனவே இவர்கள் இது சம்பந்தமாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு ஒன்றையும் செய்துள்ளனர்.

நிரந்தர பணியாளர்களான இவர்களை திடீரென பணியிலிருந்து நிறுத்தியதுடன், கடந்த யூலை மாதத்திலிருந்து சம்பளமும் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், இவர்களுக்கு கிடைக்க வேண்டிய நட்டஈட்டுக் கொடுப்பனவும் புதிதாக வந்த சுற்று நிருபத்தின்படியே வழங்கவேண்டும். மற்றைய பணியாளர் போல் தமக்கும் பாரபட்சமின்றி வழங்க அதிகாரி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பிரித்தானிய பிரமுகர்கள் 5 ஆம் திகதி யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளனர்

பிரித்தானிய நாட்டின் கொன்சர்வேட்டிவ் கட்சி பிரமுகர்கள் இருவர் எதிர்வரும் 5 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயத்தை மேறகொள்ளவுள்ளனர்.

பிரித்தானிய எதிர்க்கட்சியின் நிழல் மந்திரியான, ஆர்.ரி.மிச்சல் அனகிரம்ற், எம்.பி.லோர்ட் அஸ்கிராப்ற்ட் ஆகிய இருவருமே வருகை தரவுள்ளனர்.

யாழ். வரும் இவர்கள் அன்றைய தினம் காலை யாழ்.செயலகத்தில் வைத்து, அரச அதிபர் மற்றும் உயரதிகாரிகளையும் சந்தித்து குடாநாட்டு நிலைமைகள் பற்றி ஆராய்வதுடன், பல்வேறு இடங்களுக்கும் சென்று சுற்றிப்பார்வையிடவுள்ளதாகவும் தெரியவருகிறது.

## மட்டக்களப்பிலிருந்து கண்காணிப்புக்குழு வழித்துணையுடன்

# நூறு பெண் போராளிகள் தரைவழியாக வன்னிக்கு!

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகளின் நூறு பெண் போராளிகள் கண்காணிப்புக் குழுவின் உதவியுடன் இராணுவப் பாதுகாப்பில் தரைமார்க்கமாக நேற்றுக்காலை மட்டக்களப்பில் இருந்து வன்னி புறப்பட்டதாக - இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட மகளிர் படைப்பிரிவின் விசேட தளபதி நிலாவினி தலைமையில் சென்ற இந்தக் குழுவினர் செங்கலடி கறுத்தப்பாலத்தில் வைத்து கண்காணிப்புக்குழுவினரும், இராணுவத்தினரும் வரவேற்று அழைத்துச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் போராளிகளை அழைத்துச் சென்ற - கண்காணிப்புக் குழுவினர் பயணம் செய்த ஜீப்வண்டி ஒன்று ஹபரணைப் பகுதிக்கருகில் விபத்துக் குள்ளானதாகவும் தெரிவிக்கப் படுகிறது.



வன்னிக்கான பயணத்தை ஆரம்பிக்க முன்னர் கண்காணிப்புக்குழு அதிகாரியுடன் தளபதி நிலாவினி கைலாகு கொடுப்பதையும், போராளிகள் பயணத்துக்காக பஸ்ஸில் ஏறுவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

## மின்சாரம் தாக்கியதில் இளம் குடும்பஸ்தர் பலி!

(யாழ்ப்பாணம்)

மின்சாரம் தாக்கியதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுக்காலை உடல் கருகி பலியானார்.

கொட்டடி மீனாட்சி அம்மன் கோயிலடியைச் சேர்ந்த - நான்கு பிள்ளைகளின் தந்தையான பொன்னுத்துரை சுரேந்திரன் (வயது 28) என்பவரே மின்சாரம் தாக்கி மரணமானார்.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது, நேற்றுமுன்தினம் இரவு வீட்டில் படம் பார்த்துக்கொண்டிருந்த சமயம் - மின்வயரில் ஏற்பட்ட மின் ஒழுக்கினால் தொடர்ந்து படம் பார்க்க முடியாமல் போய்விட்டது. பின்னர், நேற்றுக்காலை மின்வயரில் ஏற்பட்ட மின் ஒழுக்கினை சரிபார்த்தபோது, மின்சாரம் தாக்கி இவர் பலியானதாகத் தெரியவருகின்றது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 01360290 01360291
email . jaffna @ expoavi . com.
(சி -1139)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில்
உங்கள் தோழன்...

# சமாதான நீதிவான்களாக நியமனம் பெற்றவர்கள் விபரம்

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரனின் சிபார்சின் பேரில், நீதி நிர்வாக கட்டமைப்பு அமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதிவான்களாக 142 பேருக்கு யாழ்ப்பாணத்தில் நியமனங்கள் கிடைத்துள்ளன.

அக்கடிதங்களை, உரியவர்கள் பலாலி வீதியில் அமைந்துள்ள அமைச்சர் மகேஸ்வரனின் இல்லத்தில் இன்று முதல் பெற்றுக்கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர். நியமனம் பெற்றோர் விபரங்கள் வருமாறு-

எஸ்.அன்ரனி (குருநகர்), எம்.ஆறுமுகம் (பொலிகண்டி), வி.மகேந்திரன் (கரவெட்டி), எஸ்.சிவராசா (கரவெட்டி), ரி.விமலேஸ்வரன் (மானிப்பாய்), ரி.ஐயாத்துரை (கரவெட்டி), ரி.நாகரெட்ணம் (நல்லூர்), வி.தவச்செல்வம் (செம்பியன்பற்று), அம்பிகாநிதி (வரணி), கணபதி ராஜேந்திரம் (அல்வாய்), எஸ்.தங்கராசா (கரவெட்டி), எஸ்.கணபதிப்பிள்ளை (கரவெட்டி), வி.ஆரியராசா (தொண்டமனாறு), சிவசுப்பிரமணியம் (அல்வாய்), எஸ்.ராசநாயகம் (புத்தூர்), எஸ்.மோகனதாஸ் (தொண்டமானாறு), என்.பத்மநாதன் (கரவெட்டி), கே.புருஷோத்தம குருக்கள் (கரவெட்டி), வி.சிவசுப்பிரமணியம் (கரவெட்டி), கே.யோகநாதன் (கரவெட்டி), சி.சிவமூர்த்தி (கரவெட்டி), பி.இராதாகிருஸ்ணன் (கரவெட்டி), என்.சபாநாயகம் (கரவெட்டி), எஸ.தயானந்தன் (உடுப்பிட்டி), எம்.நகுலராஜ் (குடத்தனை), எம்.சுந்தரலிங்கம் (அல்வாய்), கே.மகேந்திரம் (உடுப்பிட்டி), எம்.ஆனந்தராஜன் (அல்வாய்), பி.கணபதிப்பிள்ளை (அல்வாய்), கே.சிவபாதசுந்தரம் (உடுப்பிட்டி), கே.விநாயகமூர்த்தி (கரவெட்டி), கே.குணரட்ணம் (கரவெட்டி), எஸ்.விஜயகுமார் (கரவெட்டி), ஆர்.ஜெகநாதன் (பருத்தித்துறை), ஏ.ஜெயகுமார் (பருத்தித்துறை), என்.சந்திரசேகரன் (பருத்தித்துறை), ரி.சிவராசா (புத்தூர்), எஸ்.கணபதிப்பிள்ளை (கரவெட்டி), பி.செந்தில்செல்வன் (கரவெட்டி), வி.நடராஜக்குருக்கள் (புத்தூர்), வி.சுதாகரன் (நீர்வேலி), கே.அருமைத்துரை (அல்வாய்), எம்.பிலேந்திரன் (கரவெட்டி), வி.கருணாமூர்த்தி (புலோலி), எம்.கே.ஜீவதாஸ் (சாவகச்சேரி), கிருபாணந்தசர்மா (யாழ்ப்பாணம்), கே.கமலசேகரம் (காங்கேசன்துறை), கே.மயில்வாகனம் (வட்டுக்கோட்டை), கே.குணரட்ணம் (சுன்னாகம்), கே.ராஜேஸ்வரி (திருநெல்வேலி), எஸ்.கலியுகவரதன் (மானிப்பாய்), கே.ஜெயந்தா (நல்லூர்), எஸ்.பத்மநாதன் (நல்லூர்), எம்.அம்பிகாவதி (கொக்குவில்), எஸ்.பாலேந்திரன் (வேலணை), வி.விநாயகமூர்த்தி (ஊர்காவற்துறை), எஸ்.புலேந்திரராஜ் (கோண்டாவில்), எஸ்.தங்கராஜ் (திருநெல்வேலி), எஸ்.சிவசுப்பிரமணியம் (மூளாய்), எஸ்.செல்வசசீபன் (நல்லூர்), எஸ்.சிவபூரணநாதன் (கந்தர்மடம்), எஸ்.மயூரகிரிநாதன் (ஊர்காவற்துறை), எஸ்.பரஞ்சோதிநாதன் (வேலணை), என்.மகேந்திரன் (வேலணை), ஹரீந்திரக்குருக்கள் (கைதடி), என். ஞானபாஸ்கரன் (கல்வியங்காடு), என்.ஸ்ரீரஞ்சன் (திருநெல்வேலி), பி.சிவநந்தன் (கல்வியங்காடு), பி.ராஜேஸ்வரன் (கந்தர்மடம்), பி.பாலசுப்ரமணியம் (வேலணை), பி.தேவகுமார் (வட்டுக்கோட்டை), வி.ஜெயராணி (நீர்வேலி), வி.ஜெயரத்தினம் (ஆனைக்கோட்டை), வி.நமசிவாயம் (திருநெல்வேலி), ரி.சகாதேவன் (கொக்குவில்), ரி.பரமேஸ்வரன் (சுன்னாகம்), எஸ். ராஜேஸ்வரக்குருக்கள் (புங்குடுதீவு), என்.வைரவநாதன் (குப்பிளான்), வி.மகாலிங்கம் (சாவகச்சேரி), எம்.சிவசந்திரபோஸ் (யாழ்ப்பாணம்), எஸ்.இரத்தினசிங்கம் (பளை), எஸ். பாஸ்கரன் (கந்தர்மடம்), எஸ்.மரியாம்பிள்ளை (நாவாந்துறை), எஸ்.சுந்தரேஸ்வரன் (காரைநகர்), எஸ்.திருவாதவூரர் (சுழிபுரம்), கியூ.ஆனந்தராசா (யாழ்ப்பாணம்), பி.ஸ்ரீகாந்தன் (வட்டுக்கோட்டை), எஸ்.சிவகுமாரன் (யாழ்ப்பாணம்), எச்.விஸ்வநாதன் (வட்டுக்கோட்டை), ரி.தியாகலிங்கம் (யாழ்ப்பாணம்), எஸ்.சிவபாதசுந்தரம் (யாழ்ப்பாணம்), எஸ.சண்முகரட்ணம் (கைதடி), எஸ்.விக்னேஸ்வரன் (வேலணை), எஸ்.வேலுப்பிள்ளை (கொடிகாமம்), கே.வேலாயுதபிள்ளை (சாவகச்சேரி), ரி.துஷ்யந்தன் (யாழ்ப்பாணம்), கே.கலைச்சந்திரன் (யாழ்ப்பாணம்), பி.ஈஸ்வரராஜா (யாழ்ப்பாணம்), எம்.ஸ்ரீநாதன் (யாழ்ப்பாணம்), வி.திருச்செல்வம் (அல்லைப்பிட்டி), பி.சிவபாஸ்கரன் (யாழ்ப்பாணம்), ரி.சிவபாலன் (நல்லூர்), ரி.சிவராசா (யாழ்ப்பாணம்), வி.கணேசலிங்கம் (நல்லூர்), எஸ்.குமாரசிங்கம் (சங்கானை), எஸ்.சிவசங்கர் (யாழ்ப்பாணம்), வி.கம்சன (யாழ்ப்பாணம்), ஐ.தியாகராஜ் (கொக்குவில்), வி.செல்லத்துரை (யாழ்ப்பாணம்), ரி.தர்மலிங்கம் (சாவகச்சேரி)ஏ.அகுஸ்தீன் (யாழ்ப்பாணம்), கே.தர்மராசா (கந்தர் மடம்), கே.ரட்ணராஜா (கோப்பாய்), எம்.நந்தீஸ்வரன் (கட்டைப்பிராய்), எம்.சண்முகராஜா (வேலணை), எம்.சஸ்ருதன் (உரும்பிராய்), பி.தேவதாஸ் (காரைநகர்), வரதராஜசர்மா (யாழ்ப்பாணம்), எஸ்.இளங்கீரன் (யாழ்ப்பாணம்), சிவயோகராணி (சித்தன்கேணி), எஸ்.செல்வராஜ் (கைதடி), பி.தேவராஜ் (வட்டுக்கோட்டை), ரி.குகநேசன் (மல்லாகம்), ரி.சிவநாதன் (புங்குடுதீவு), ரி.ரவீந்திரன் (சங்கானை), ரி.ராசேந்திரம் (கொக்குவில்), ரி.சீவரட்ணம் (யாழ்ப்பாணம்), வி.ஜின்ஜின்ஸ்ரைன் (யாழ்ப்பாணம்), வி.யோகலிங்கம் (யாழ்ப்பாணம்), வி.சிவகுருநாதன் (காரைநகர்), ரி.தேவராஜா (யாழ்ப்பாணம்), ரி.சுந்தரலிங்கம் (யாழ்ப்பாணம்), வி.கந்தசாமி (மாதகல்), எஸ்.வைரவநாதன் (மாதகல்), ரி.சற்குணராசா (யாழ்ப்பாணம்), ரி.பரராஜசிங்கம் (காரைநகர்), ரி.விமலேஸ்வரன் (மானிப்பாய்), ரி.நாகரெட்ணம் (நல்லூர்), சி.குருநாதசிவம் (யாழ்ப்பாணம்), து.குருநாதசிவம் (யாழ்ப்பாணம்), நித்தியானந்தன் (புங்குடுதீவு).


நிறைஞ்சனாஸ் சங்கானை

சரத்குமார், சிம்ரன் நடித்த

அரசு

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்

THE PEACE KEEPER

இரவுக் காட்சி. 8.45 (பு.நே)

(சி-1425)

ராஜா யாழ்ப்பாணம்.

மாதவன், சிம்ரன், நடித்த

பார்த்தாலே பரவசம்

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30. 9.30 (பு.நே)

ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

(சி-1424)



யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

பவள விழாவையொட்டிய

அங்குரார்ப்பண விழா

நாள்:- 2003-09-03 புதன்கிழமை காலை 10.00 மணி

இடம்:- கல்லூரி பிரதான மண்டபம்

தலைமை:- திரு.வி.மாணிக்கம் (அதிபர்)

நிகழ்வுகள்

* கொடியேற்றல்
* மங்கள விளக்கேற்றல்
* இறைவணக்கம்
* நிறுவுனர் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிதல்
  திருமதி யசோதரா நாகேந்திரன்
* வரவேற்புரை - திரு.இ.தவபாலன்
* அருளாசியுரைகள்:-
  1.ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் (நல்லை ஆதீன முதல்வர்)
  2.அருட்திரு. கலாநிதி மைக்கல் A.P.R செளந்தரநாயகம் (பங்குத் தந்தை யாழ். மரியன்னை பேராலயம்)
  3.திரு. கே.எம்.எஸ்.ஹமீட்
* தலைமையுரை
* வாழ்த்துரைகள்:-
  1.திரு. நா.வரதராசா (பிரதிக் கல்விப் பணிப்பாளர் - யாழ்.வலயம்)
  2.திரு. சீ.வீ.கே.சிவஞானம் (தலைவர் ப.மா.சங்கம்)
  3.திரு. சொ.மன்மதராசலிங்கம் (செயலாளர் பா.அ.சங்கம்)
  4.திரு.வே.கருணாகரன்
  5.திரு.அ.குமரன் (தமிழ்க்குமரன்)
* நிறுவுனர் நினைவுப் பேருரை
  வழங்குபவர் – திரு. க.சண்முகலிங்கம் (சமாதான நீதிவான், இளைப்பாறிய அதிபர்)
* மாணவர் உரை:-
  வழங்குபவர் – செல்வி.ரம்யா உதயகுமார்
* கவிதாஞ்சலி:-
  வழங்குபவர் - கவிமாமணி மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன
* நன்றியுரை:- திரு.பூ.குகதாசன் (செயலாளர் ப.மா.சங்கம்)
* கல்லூரிக்கீதம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.

(சி-1430)



மிதிவெடி அபாயக் கல்வி வாரம் - யாழ்.மாவட்டம்

செப்ரெம்பர் 01 –07 வரை

மிதிவெடி, வெடிபொருட்களினால் ஏற்படும் ஆபத்தைத் தடுக்க பொது மக்களாகிய நாம் அவதானமாக இருப்போம்.



- நாங்கள் செல்லும் இடங்களிற்கு, முன்னர் பாவித்த பாதுகாப்பான பாதைகளையே பாவிப்போம்.
- நாம் புதிய இடங்களிற்குச் செல்லும்போது, அவ்விடத்தின் மிதிவெடி அபாயம் பற்றி அப்பிரதேச வாசிகளிடம் கேட்டுத் தெரிந்துகொள்வோம்.
- எமதுபிரதேசத்திற்குள் புதிதாக வருபவர்களிற்கு எமது பிரதேசத்தின் பாதுகாப்புநிலை பற்றிய சரியான தகவல்களைக் கொடுப்போம்.



- மீளக்குடியமரும் பிரதேசமாக இருப்பின் அப்பிரதேசம் முழுமையாக மிதிவெடி இல்லாத பிரதேசமா என்பதை உறுதிசெய்து, மீளக்குடியமருவோம்.
- இனம் புரியாத மர்மப்பொருட்களைக் கண்டால், உரிய இடங்களிற்கு அறிவிப்போம்.
- மிதிவெடிகள், வெடிபொருட்கள் சம்பந்தமான அபாயப் பலகைகள் உள்ள இடங்களிற்குள் நுழையாமலும், அபாயப் பலகைகள் உரிய இடத்தில் உள்ளது என்பதையும் உறுதிப்படுத்துவோம்.



- மிதிவெடி, வெடிபொருட்களின் பாதிப்புக்களை மற்றவர்களிற்கும் எடுத்துக்கூறி, மிதிவெடி, வெடிபொருட்களினால் ஏற்படும் பாதிப்பை தடுப்போம்.

ஆபத்து நிறைந்த பூமியில் அவதானமாக நடப்போம்

(சி.1421)

மாவட்ட மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகம் - யாழ்ப்பாணம்

# ஜனாதிபதி சந்திரிகாவின் கடிதத்துக்கு பிரதமர் ரணில் பதில் அனுப்பிவைப்பு!



(கொழும்பு)

புலிகளின் குரங்குப்பாஞ்சான் முகாம் தொடர்பாக, கடந்த மாதம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி அனுப்பிய கடிதத்துக்கு பதில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குரங்குப்பாஞ்சான் விவகாரம் மற்றும் போர் நிறுத்த கண்காணிப்புக்குழு விவ்காரம் ஆகியன தொடர்பாக, விளக்கங்கள் கோரி - ஜனாதிபதி கடிதங்களை அனுப்பியிருந்தார்.

இதற்குப் பிரத்மர் அனுப்பியுள்ள கடிதத்தில் குரங்குப்பாஞ்சான் முகாம் தொடர்பான விவகாரங்கள் முற்றிலும் போர் நிறுத்த உடன்படிக்கை தொடர்பானது. அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

குரங்குப்பாஞ்சான் முகாமை அகற்றுவது தொடர்பாக, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது தொடர்பாக - நோர்வேயின் சிறப்புத் தூதுவர் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தி வருகின்றார் எனவும் .

இராணுவத்தின் வலிமையை குறைக்கும் நடவடிக்கைகளை பிரதமர் ரணில் எடுக்கிறார் என்ற, ஜனாதிபதியின் குற்றச்சாட்டு குறித்து பிரதமர் அளித்துள்ள விளக்கத்தில்-



வடக்கு - கிழக்கில் உள்ள இராணுவத்தினரதும் பொலிஸாரினதும் வலிமையைக் குறைக்கும் செயல்கள் எதுவும் நடைபெறவில்லை. அவர்களின் திறமையை வளர்க்கும நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று குறிபபிடப்பட்டுள்ளது. ஜனாதிபதிக்கு, இவை தொடர்பாக மேலதிக விளக் கங்கள் தேவையாக இருந்தால் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன வழங்கத் தயாராகவுள்ளார். அவரைச் சந்தித்து, ஜனாதிபதி விளக்கங்கள் பெற்றுக்கொள்வதற்கு ஒழுங்குகள் செய்துதரப்படும்.

மக்களிடம் தனக்கு இருக்கும் செல்வாக்கை கெடுக்கும் நோக்கில் வேலைகள் இடம்பெறுவதாகவும்,

அரசியல் இலாபத்திற்காக, அரசை நடத்துவது சரியானதல்ல. இவ்வாறான நடவடிக்கைகள் களைய வேண்டுமென்பது, தனது தாழ்மையான கருத்தாகும் என்றும் பிரதமர், மேலும் தெரிவித்தார்.

# சுற்றுநிருபங்களை புறக்கணிக்க முதலமைச்சர்கள் தீர்மானம்!

(கொழும்பு)

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்திற்கு முரணானவகையில் - அரசாங்கம் வெளியிடுகின்ற சுற்றுநிருபங்களைப் புறக்கணிக்க,மாகாண முதலமைச்சர்கள் தீர்மானித்துள்ளனர்.

காலியில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாகாண முதலமைச்சர்களின் கூட்டத்தின்போது, இந்தத் தீமானம் ஏகமனதாக எடுக்கப்பட்டது.

மத்திய அரசாங்கத்திடம் முன் வைக்கும் பொருட்டு, 17 பிரேரணைகள் - இந்த கூட்டத்தில் முன் மொழியப்பட்டுள்ளது.

எதிர்வரும், வரவு-செலவு திட்டத்தின்போது, அரசாங்கம் நிதியொதுக்கீடுகளைச் செய்யவேண்டுமென்றும் அரசாங்கத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகளில் கோரிக்கைகள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பல்கலைக்கழக பணியாளர்களுக்கு அடுத்த வருடம் புதிய சம்பளத்திட்டம்

கடந்த பல நாட்களாக நடைபெற்ற பல்கலைக்கழக ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டத்தின் காரணமாக, ஆசிரியர் உள்ளிட்ட சகல பல்கலைக்கழக பணியாளருக்கும் - அடுத்த வருடம் முதலாம் திகதி முதல், புதிய சம்பளத் திட்டத்தினை அமுல் செய்ய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உடன்பட்டுள்ளது.

இதன்படி இடைக்கால நிவாரணமாக ஒகஸ்ட் மாதம் முதல் டிசம்பர் வரையிலான காலப்பகுதிக்குள் ஐயாயிரம் ரூபாவினை வழங்க முடிவு செய்துள்ளது. இதில் மூவாயிரத்து முந்நூறு ரூபாய் ஒகஸ்ட் மாத சம்பளத்துடன் வழங்கப்படும்.

இதேவேளை - குறைந்த சம்பள நிலையான ஏ10 முதல் ஏ15 வரையிலுள்ள ஊழியர்களுக்கு, இம்மாதம் செப்ரெம்பர் முதல் டிசெம்பர் வரை தலா ரூபாய் நூற்றிஐம்பதினை வழங்கவும் தீர்மானித்துள்ளது.

இது தவிர, சம்பள உயர்வு குறிப்பிட்ட சில சம்பளத் தரங்களில் உள்ளவர்களின் சம்பள முரண்பாடுகளும் தீர்க்கப்பட்டுள்ளது.

இந்த தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தில், ஆதரவு நல்கிய அனைவருக்கும் - தமது நன்றிகளை தெரிவித்துக்கொள்வதாக, பல்கலைக்கழக ஊழியர்கள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

# இலங்கையின் அபிவிருத்திக்கு துரித திட்டம் முன்வைப்பு!

இலங்கையின் அபிவிருத்தியை துரிதமாக மேற்கொள்வதற்கான திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளதாக, ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் கூறியுள்ளார்.

18 மாத காலப்பகுதியில், துரித அபிவிருத்தித் திட்டங்கள் அரசினால் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

வடக்கு - கிழக்கில் மாத்திரம் அல்லாமல், தென்பகுதிக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன.

ரோக்கியோவில் கிடைத்த நிதியைக்கொண்டு, இந்த அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஆயிரத்து எழுநூற்று நாற்பது கோடி ரூபா இந்த அபிவிருத்தி திட்டங்களுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஊடகத்துறை அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# உறக்கத்திலிருந்த திருடனை மக்கள் மடக்கிப் பிடித்தனர்!

(கொக்குவில்)

உறக்கத்திலிருந்த திருடனை, வீட்டின் உரிமையாளர் எழுப்பி பொதுமக்களின் உதவியுடன் நையப்புடைத்த பின், பொலிஸாரிடம் ஒப்படைத்த சம்பவம் - நேற்றுமுன்தினம் கொக்குவில் ஸ்ரேசன் வீதிப் பகுதியில் இடம்பெற்றது.

மூன்று திருடர்கள் கூரையைப் பிரித்து உள்ளே இறங்க, ஒருவர் காவலிற்காக வாசலில் நிறுத்தப்பட்டார். சத்தம் கேட்டு உரிமையாளர் விழித்தெழவே, மூவரும் பின் வழியாக தப்பியோடிவிட்டனர். வாசலில் நிறுத்தப்பட்டவர் உறங்கி விட்டதால், வீட்டு உரிமையாளரால் மடக்கிப்பிடிக்கப்பட்டார். ஏனையோரை கைதுசெய்ய, தற்போது நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது (111)





நாட்டுப்பற்றாளர் கருணாநிதியின் உருவப்படம், அவரது இல்லத்திலிருந்து எடுத்துவரப்படுவதை முதலாவது படத்திலும், உருவப்படத்திற்கு அவரது மனைவி மலர்மாலை அணிவிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# இடைக்கால நிர்வாக சபையை புலிகள் கேட்பதில் தவறில்லை

## சப்பிரகமுவ முதலமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய கூடுதல் அதிகாரம் கொண்ட இடைக்கால நிர்வாக சபை ஒன்றை, விடுதலைப் புலிகள் கேட்பதில் எந்தவிதத் தவறும் இல்லை என - சப்ரகமுவ மாகாண முதலமைச்சரும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் - பலாங்கொடை தொகுதி அமைப்பாளருமான சாலிய எல்லாவெல தெரிவித்தார்.

இரத்தினபுரி புதிய நகரத்தில மைந்துள்ள மாகாண சபையின் கேட்போர் கூடத்தில், பொதுஜன ஐக்கிய முன்னணியின் மாகாண சபைஉறுப்பினர் ஜீ.எம்.கருணபால தலைமையில், சப்ரகமுவ மாகாண சபையின் மாதாந்தக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இக் கூட்டத்திலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாக சபை குறித்து, தெளிவான கொள்கை உள்ளது. மாகாண சபைகளுக்கு போதிய அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்ட போதிலும், முழுமையான அதிகாரங்கள் இன்னும் வழங்கப்படவில்லை. இதனால்தான், மாகாண சபைகள் பூரண சுதந்திரமாக இயங்க முடியாதநிலை காணப்படுகிறது. இதன் காரணமாகவே, விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாக சபையொன்றைக் கேட்கின்றனர். அவர்களின் கோரிக்கை நியாயமானது.

அவசர தேவையின்போது, ஒரு நியமனங்களைக்கூட மாகாண சபையால் வழங்கமுடியாதுள்ளது. இதற்காக திறைசேரியின் அனுமதி பெறப்படவேண்டும். திறைசேரியின் அனுமதி பெற, பல கடிதங்கள் அனுப்பினாலும் - தேவையான நேரத்தில் பதில் கிடைப்பதில்லை.

மாகாண சபையால் வழங்கப்பட்ட நியமனங்களைக்கூட இரத்துச் செய்யக்கூடிய அதிகாரம், மத்திய திறைசேரியிடம் உள்ளது. இதனால், மாகாண சபை கேள்விக்குறியாக உள்ளது. புதிய அரசாங்கம் - பிராந்திய ரீதியிலான அமைச்சுக்களை ஏற்படுத்தியதால், நிதி ஒதுக்கீடு செய்யும் போது, பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் நாலக்க அத்துகோரன உரையாற்றுகையில்-

இந்த மாகாண சபைக்கு வழங்கப்பட்ட நிதியில், 50 வீதமான நிதியே அரசால் செலவழிக்கப்படுகிறது. மிகுதி மீண்டும் திறைசேரியை சென்றடைந்து விடுகிறது. இந்த நிலையில் அரசு நிதிக் குறைப்புச் செய்திருக்கிறது என்று, தொடர்ந்து குற்றஞ்சாட்டுவது வேடிக்கையாக இருக்கிறது என்றார்.

அதற்கு மறுப்புத் தெரிவித்த மாகாண முதலமைச்சர் - மாகாண சபைக்குப் போதிய நிதியை திறைசேரி ஒதுக்குவதில்லை. அத்துடன், பிராந்திய அமைச்சினூடாக வழங்கப்பட்டுள்ள நிதி மற்றும் அதிகாரங்களை மாகாண சபையிடமிருந்து அரசாங்கம் பறித்துக் கொள்கிறது என்று தெரிவித்தார். (க)

## வாழைச்சேனையில் நால்வர் கைது!

வாழைச்சேனையில் இரு முஸ்லிம் இளைஞர்கள் காணாமற்போன விடயம் தொடர்பாக, 4 பேர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களின் கைது தொடர்பான, விசாரணைகளை - கொழும்பில் மேற்கொள்ளவேண்டும் என, கல்முனைப் பொலிஸார் கேட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டுள்ள 2 பேர், ஏற்கனவே - கல்முனைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டவர்கள், இவர்கள் ஆயுதக்குழுவினரோடு சம்பந்தப்பட்டவர்களாக இருக்கலாம் என, கல்முனைப் பொலிஸார் கருத்து தெரிவித்துள்ளனர்.

## துயிலும் இல்லம் புனரமைப்பு!

(கிளிநொச்சி)

முலலைத்தீவு - அளம்பில் மாவீரர் துயிலுமில்லம் கடற்புலிகளினால் புனரமைப்புச்செய்யப்பட்டு வருகிறது. மாத்தளை தொடக்கம் நாயாறு வரையான கிராம மக்களின் பங்களிப்புடன், முல்லை மாவட்ட கடற்புலிகளால் இத்துயிலுமில்லப் புனரமைப்பு வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## சாட்டி சித்தாந்திரை மாதா கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

சாட்டி சித்தாந்திரை மாதா யாத்திரைத் தலத்தின் திருவிழா, எதிர் வரும் 11 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

## சந்திரிகா தலைமையில்

# சுதந்திரக் கட்சியின் வருடாந்த மாநாடு

குருணாகல் - மாலிகாபிட்டியவில்,சிறிலங்கா சுதந்திர கட்சியின் 52 ஆவது வருடாந்த சம்மேளன மாநாடு, ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க தலைமையில் இன்று நடைபெறவுள்ளது.

"மாற்றத்துக்குத் தயாராவோம்" என்ற தலைப்பில் நடைபெறும் இந்த மாநாட்டுக்கு - ஐ.தே.கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகளுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டதாக தெரியவருகிறது.

இந்த மாநாட்டில், தற்பொழுது நடைபெற்றுவரும் ஆட்சியில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக, நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டக்கோஷம் எழுப்பவேண்டும் என்ற யோசனை ஒன்றும் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக மாணவர்களிடையே கருத்தரங்கு

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினர், ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் அனுசரணையுடன் கல்விப் பொதுத் தராதர உயர் வகுப்பு மாணவர்களிடையே, மனித உரிமைகள் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், சிறுவர் துஷ்பிரயோகங்களினைப் பற்றி அறியவைப்பதற்காகவும், கருத்தரங்குகளினை ஏற்பாடுசெய்து, பாடசாலைகள் தோறும் நடாத்தி வருகின்றனர்.

இத்தகைய கருத்தரங்கு ஒன்று, யாழ்.புனித சாள்ஸ் மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவர்களிடையே நடைபெற்றது. மேலும் கருத்தரங்குகளை யாழ்ப்பாணப் பாடசாலைகளில் நடாத்தவுள்ளதாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (58)

# பிரதேச ஆங்கிலவள நிலையத்தை கிளிநொச்சியில் ஆரம்பிக்க கோரிக்கை

(கிளிநொச்சி)

வன்னி மாவட்டத்திற்கான பிரதேச ஆங்கிலவள நிலையத்தை, கிளிநொச்சியில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கும்படி கல்வி அமைச்சின் செயலாளரிடம் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் முப்பதுக்கு மேற்பட்ட ஆங்கிலவள நிலையங்கள் உள்ளன. ஆனால், வவுனியா தெற்குப் பிரதேசத்துக்கு அப்பால் அவ்வாறான ஒரு நிலையம் இதுவரை நிறுவப்படாமையால், ஆங்கில அறிவு வளர்ச்சியில் இந்த நிலையத்தில் கிடைக்கக்கூடிய பல நன்மைகள் கிடைக்கவில்லை என்று கிடையாமையை அறியக்கூடியதாகவுள்ளது. இது மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இழைக்கப்படும் அநீதியாக கருதவேண்டியுள்ளது.

இந்நிலையம் கல்வி உயர் கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவனம், பிரிட்டிஷ் கவுன்சில் என்பனவற்றின் அனுசரணையுடன் நிறுவப்பட்டு, நிறுவகிக்கப்படும் ஒரு நிலையமாக ஆங்கிலவள நிலையைம் அமைக்கப்படவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

## தொலைக்காட்சி அன்பளிப்பு

வல்வெட்டித்துறையை சேர்ந்தவரும், தற்போது இந்தியாவில் வசித்து வருபவருமான வர்த்தகர் ஒருவர், 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தொலைக்காட்சி ஒன்றை வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலைக்கு அன் பளிப்பாக கொடுத்துள்ளார்.

வைத்தியசாலையின் நோயாளர் நன்மை கருதி, இந்த தொலைக்காட்சியை வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவுக்கான நோர்வே தூதுவராக ஜோன் வெஸ்பேர்க் நியமிக்கப்படலாம்?.

லங்காதீப தகவல்

இலங்கையின் முன்னாள் நோர்வேத் தூதுவர் - ஜோன் வெஸ்ப்பேர்க் சில வாரங்களில், புதுடில்லியின் நோர்வே தூதுவராக நியமிக்கப்படலாம் என்று 'லங்காதீப' பத்திரிகை தெரிவித்துள்ளது.

தற்போது, பின் தங்கிவிட்டுள்ள இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகளை, முன்னெடுப்பதற்கு இலங்கை - நோர்வே - இந்தியாவுக்கான ஒன்றிணைந்து, இராஜ தந்திரரீதியாகச் செயற்படலாம் என்று அப்பத்திரிகை மேலும் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் இந்தியத் தூதுவராகவிருந்த கோபால் கிருஷ்ண காந்தி, நேர்வேயின் இந்தியத் தூதுவராக இருந்த நிருபம் சென் இந்தியாவின் இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டிருப்பது இந்திய அரசாங்கத்தால், இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு வலுவூட்டுவதாக அமைந்திருக்கலாம் என்றும், அந்தப் பத்திரிகை கூறியுள்ளது.

விடுதலைப் புலிகளின் அண்மையில் இலங்கை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கவுள்ள இடைக்கால நிர்வாக சபை பற்றி, விரைவில் இந்தியா ஒரு தீர்மானம் எடுக்கலாம் என்று லங்காதீப குறிப்பிட்டுள்ளது.

# சேதமடைந்த சின்ன பூவரசம்குளம் நியாப்திட்டதின் கீழ் புனரமைப்பு

(கிளிநொச்சி)

படையினரால் மேற் கொள்ளப்பட்ட ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை மூலம் மிகவும் மோசமாக சேதமடைந்துள்ள சின்னப் பூவரசங்குளம் தற்போது நியாப் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

கடந்த 1997 ஆம் ஆண்டு படையினர் சின்னப் • பூவரசங்குளம் பகுதியை ஆக்கிரமித்து, குளத்தின் அணைக்கட்டுக்களில் காப்பரண்களையும், பதுங்குகுழிகளையும் அமைத்திருந்தனர்.

படையினரின் மேற்படி நடவடிக்கையால், குளத்தில் நீர் தேங்கி வைக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன், குளத்தின் அணைக்கட்டுக்களும் மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ளது. அத்துடன் - குளத்துக்கு நீர் வழங்கும் கட்டாறு தூர்ந்துள்ளதால் குளத்துக்கான முழுமையான நீரும் வந்துசேர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில், இப்பகுதியில் உளள சுமார் 100 ஏக்கர் இங்கு மேற்பட்ட நெல்வயல்களில் பயிர் செய்கை பண்ண முடியாதநிலை ஏற்பட்டுள்ளதுடன் ,இப்பகுதி விவசாயிகளும் பாதிப்படைந்துள்ளனர்.

விவசாயிகளின் இந்நிலையைக் கருத்திற் கொண்டு, மேற்படி குளம் நியாப் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

# கிளிநொச்சி கமநல நிலையங்களில் அபிவிருத்தி அலுவலருக்கு பற்றாக்குறை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆறு கமநல கேந்திர நிலையங்களில், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பதவிகள் வெற்றிடமாக உள்ளன. கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களை, கமநல அபிவிருத்தித் திணைக்களம் நியமிக்காததினால் இவ்வெற்றிடம் கடந்த பல வருடங்களாக காணப்படுகிறது.

முழங்காவில், புளியம்பொக்கணை, பளை, கிளிநொச்சி, உருத்திரபுரம், இராமநாதபுரம் ஆகிய ஆறு கமநல கேந்திர நிலையங்களிலேயே மேற்படி வெற்றிடம் காணப்படுகிறது.

தற்போது பூநகரி கமநல கேந்திர நிலைய கமநல உத்தியோகத்தரும், அக்கராயன் கமநல நிலைய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரும், மேற்படி வெற்றிடமாகவுள்ள ஆறு கமநல கேந்திர நிலையங்களில், இருவரும் தலா மூன்று கமநல கேந்திர நிலையங்களில் கிழமையில் ஒவ்வொரு நிலையத்துக்கும் ஒருநாள் சென்று தமது கடமைகளை மேலதிகமாக செய்துவருகின்றனர். இதன் காரணமாக நியாப் திட்டம் மூலம் உலக உணவு திட்டத்தின் கீழ் இன்னும் பல நிறுவனங்களின் அபிவிருத்தி திட்டங்கள், குறிப்பாக சிறு நீர்ப்பாசன திட்டம் போன்ற பல திட்டங்கள் நடைமுறைப் படுவதில் இப்பிரதேசங்களில் தாமதங்கள் ஏற்பட்டு வருவதாக, இப்பிரதேசங்களைச் சேர்ந்த உள்ளூர் பொதுஅமைப்புப் பிரதிநிதிகள் கவலை தெரிவித்துள்ளனர். (17)



நந்தாவில் மனோன்மணி சனசமூக நிலைய "வாசகன்" சஞ்சிகை வெளியீட்டுவிழா அண்மையில் இடம்பெற்றது. நிலைய போசகர் நூலை வெளியிட்டுவைக்க நல்லூர் பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் தவசோதி பெற்றுக்கொள்வதைப்படத்தில்காணலாம். (111)

## புதிய நிர்வாகிகள் தெரிவு

படையாண்டான் தோட்டம் கந்தசுவாமி கோவில் இந்து இளைஞர் மன்ற புதிய நிர்வாகத் தெரிவு கடந்த வாரம் இடம்பெற்றது.

இதில் புதிய தலைவராக- சி.சிவதாசன் உபதலைவராக - சி.சிவசோதிலிங்கம், செயலாளராக - அ.வாசுதேவன். உபசெயலாளராக நந்தகோபால், பொருளாளராக கோ. ஜெயசுதனும் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் ஆறு நிர்வாக அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டு, பதினொரு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த இளைஞர் மன்றம், ஆலயத்தின் வளர்ச்சியிலும், சமூகப் பணிகளிலும் முன்னின்று செயற்படவேண்டும் என மன்றத்தின் போசகர் க.ஜெயானந்தன் அவர்களும். ஆலயத்தலைவர் செ.பாலசிங்கம் அவர்களும் புதிய நிர்வாகத்தினை கேட்டுக்கொண்டனர்.

## மாலைநேர வகுப்புக்கள்

(ஆழியவளை)

மருதங்கேணிப் பகுதியில் மீள ஆரம்பிக்கப்பட்ட பத்து பாடசாலைகளிலும்- யுனிசெப், ஜி.ரி.இசற் ஆகிய நிறுவனங்களின் நிதி உதவியுடன் மாலைநேர வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

தரம் 6 இல் அடைவு குறைந்த மாணவர்களுக்கு - தமிழ், கணிதம் ஆகிய பாடங்கள், யுனிசெப் நிறுவன உதவியுடனும், தரம் 2,3,4,5 ஆகிய வகுப்புக்களில் விஷேட உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு ஜி.ரி.இசட் நிறுவனத்தினரும் கற்றல் செயற்பாட்டிற்கான உதவிகளை வழங்கி வருகின்றனர். (122)

# கிழக்குப் பகுதிகளில் தொடர்ந்தும் சிங்களக் குடியேற்றங்கள் தீவிரம்!

(திருகோணமலை)

தற்போதைய சமாதானச் சூழ்நிலையில்கூட, வடக்கு - கிழக்கு பகுதிகளில் திட்டமிட்டரீதியில் பல சிங்களக் குடியேற்றங்கள் நடைபெற்றுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை - திரியாய்ப்பகுதியில, ஆண்டான்குளம் கிராமத்திலும், சிங்கள மக்களைக் குடியேற்றுவதற்காக - பல கிராமங்களை அமைத்து வருவதுடன், திருகோணமலை மாவட்டத்தில் - விளாங்குளம் பகுதியில், பௌத்த பிக்கு ஒருவரின் தலைமையில் பௌத்த விகாரை ஒன்று, அமைக்கப்பட்டு வருகிறது. இதே போன்று, கந்தளாய் சீனித் தொழிற்சாலை அமைந்துள்ள பகுதியிலும், சின்னத்தொடுவாய் சித்தி விநாயகர் ஆலயப் பகுதியிலும் - இவ்வாறு சிங்களமக்கள் திட்டமிட்டு குடியமர்த்தப்பட்டுள்ளதுடன், இவர்களுக்கு புதிய குடியேற்றத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

வவுனியா, மன்னார் எல்லைப்புற கிராமங்களிலும் - சிங்கள மக்களை தொடர்ந்தும் குடியேற்றும் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதற்காக, வவுனியா கொக்குவெளிக் கிராமத்தில் அமைந்துள்ள படையினரின் உயர் பாதுகாப்பு வலயம் பின் நகர்த்தப்பட்டு, அங்கும் சிங்கள மக்களைத் தொடர்ந்தும் குடியமர்த்தும் நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. இதற்கென, கண்ணிவெடிகளும் அகற்றப்பட்டுப் புதிய வீதிகள் அமைக்கப்பட்டுள்ளன.


வாழ்க வளமுடன்




முதலாவது அகவையில்

பெயர் : சி.அபிநயா
முகவரி: 'றோஸ் பவனம்' அல்வாய்.



இரண்டாவது அகவையில்



பெயர் : ற.தர்ஷனா
முகவரி: 7 ஆம் வட்டாரம், நயினாதீவு.

ஐந்தாவது அகவையில்

பெயர் : த.ரிஷிகேசினி
முகவரி: கொக்குவில் மேற்கு, கொக்குவில்.



ஏழாவது அகவையில்



பெயர் : சி.விதுஷ்யா
முகவரி: 533/01 ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:----------------------------------------
முகவரி :----------------------------------------
பிறந்த ஆண்டு:----------------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
--------------------
பெற்றார் ஒப்பம்

# வெனிசுலா நதியில் புதிய மீன் இனங்கள்

வெனிசுலா காடுகளில் ஆய்வில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகள், அங்குள்ள "கயூரு" நதிப் பிரதேசத்தில் 10 புதிய மீன்வகைகளையும், இதுவரை காணப்படாத இறால் வகைகளையும் கண்டு பிடித்துள்ளார்கள். இந்த நதிப்படுக்கை அமைந்த பிரதேசத்தை, ஒரு பாதுகாக்கப்பட்ட வலயமாகப் பிரகடனப்படுத்துமாறு "வெனிசுலா" அரசை - சர்வதேச இயற்கை வளங்களை பாதுகாக்கும் அமைப்பு கேட்டுள்ளது. இதில் 11,115 ஏக்கர் நிலப் பரப்பு அடங்கியுள்ளது. இந்த நதி - உஷ்ண வலயக் காடுகளில் அமைந்துள்ளது. மனிதர்கள் குடியேற்றத்திற்காக அவ்விடத்திலுள்ள காடுகளை அழிப்பதும், பயிர்ச்செய்கை, மீன் பிடித்தல் ஆகியவற்றாலும் சுற்றுச்சூழல் மிகவும் பாதிக் படையுமென, அவ்வமைப்புக் கருத்து வெளியிட்டுள்ளது.



எதிர் காலத்தில் அப்பிரதேசத்தில் அமைக்கப்பட உள்ள நீர்மின் உற்பத்தித் திட்டம், சூழல் பாதுகாப்பிற்குத் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சிவப்பு, பச்சை நிறத்தில் அமைந்த புதுவகையான மீன் இனமொன்று, பொழுது போக்கிற்காக மீன்வளர்ப்பவர்களிடையே மிகவும் பிரசித்தி பெற்றுள்ளது.

நீரில் அமிந்துள்ள மரங்களில் இருந்து - பழங்களையும், சிறிய மீன்களையும் உணவாகக் கொள்ளும் மீன்வகையொன்றையும் கண்டுபிடித்துள்ளார்கள்.

# மாறிவரும் விண்வெளி ஓடம்





அண்மையில் ஏற்பட்ட கொலம்பிய விண்வெளிஓட விபத்தினை யாரும் மறந்து விடமுடியாது. ஆனால், அடுத்த யுகத்திற்கான விண்வெளி ஓடத்தினைத் தயாரிப்பதில் நாஸா விஞ்ஞானிகள் தயாராகி விட்டார்கள். கொலம்பிய விண்வெளி ஓடம், தமக்கு நல்ல பாடத்தினைத் தந்திருக்கின்றது என்று விஞ்ஞானிகள் ஒருமித்துக் கூறுகின்றார்கள்.

இது அமெரிக்க அரசாங்கத்தின் ஆசீர்வாதத்துடனேயே நடைபெற்று வருகின்றது. இது ஏறக்குறைய 6 அல்லது 7 வருடங்களில் செய்துமுடிக்கப்படும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றார்கள். இது கிட்டத்தட்ட 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் செலவில் தயாரிக்கப்பட்டு வருகின்றது. இந்தக் கண்டுபிடிப்புக்குப் பிறகு, அமெரிக்காவின் தனித்துவத்தினை 2010 இற்குப் பிறகு யாருமே தடுக்கமுடியாது என்பது வெளிப்படையான உண்மை.

# வீரபத்திராசனம்



வீரர்களுக்குரிய ஆசனம் போர்க்கலை, போர் செய்வதற்கு கை, கால் அதிக உறுதியாக இருக்கவேண்டும். முதல் நிலையாக, கைகளைத் தொங்கவிடவேண்டும். இரண்டாவது நிலையாக வலது காலை முன்பக்கம் நகர்த்தி மடித்தவாறு நின்றுகொண்டு, அதேசமயம், இடது காலை பின்புறமாக நீட்டவேண்டும். பிறகு, கைகள் இரண்டையும் பிணைத்து, அதேநிலையில் கைகள் இரண்டையும் மேலே உயர்த்தவேண்டும். ஆகாயத்தைப் பார்க்கவேண்டும். இப்படி இரண்டு கால்களுக்கும், நான்கு நான்கு தடவை, மாறி மாறிச் செய்ய வேண்டும்.

மூன்றாவது நிலையாக - நேர்கோட்டில் அப்படியே நின்று கொண்டு, வலது காலை இரண்டு கைகளாலும், ஆகாயத்தைப் பார்ப்பதுபோல், தலைக்குமேல் தூக்கவேண்டும். இப்படி இரண்டு கால்களையும் மாறி மாறி நான்கு தடவை தூக்கவேண்டும்.

### வீரபத்திராசனத்தின் நன்மைகள்

கால்களைத் தலைக்கு மேல் தூக்குவதால், கால்கள் அதிக உறுதியடையும், கைகள் அதிக பலமடையும். கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகம் என்பவற்றுக்கு அதிகமான பயிற்சி உண்டாகிறது. கால்நரம்புகள், கைநரம்புக்கள் பலம்பெறும். வயிற்றில் மேலதிகமான கொழுப்பு சேராது. மாதவிடாய் சம்பந்தமான கோளாறுகள் நீங்கும். சுகப்பிரவசம் உண்டாகும். பெண்களுக்கு இடுப்பு அழகுபெறும். வீரம் உண்டாகும்.

தருபவர் - மகாநேசன்




# மத்திய ஆசியாவின் நீர்ப்பிரச்சினை

மத்திய ஆசிய நாடுகள் எதிர்நோக்கும் நீர்ப்பற்றாக்குறைக்கான தீர்வுத்திட்டமாக- பமீர் மலைகளுக்கிடையே காணப்படுகின்ற கால்வாய்களினூடு நீரைப் பெறலாம் என்ற முடிவு அண்மையில் எடுக்கப்பட்டிருக்கின்றது. கடந்த ஒகஸ்ட் மாதம் ஏற்பட்ட பாரிய பூகம்பம் - ஆப்கானிஸ்தான், தென்கிழக்கு தஜிகிஸ்தான் ஆகிய நாடுகளின் இயற்கைத் தன்மையைப் பாதித்திருக்கின்றது. இதன் காரணமாக, அங்கே நீரேரிகள் பாழாக்கப்பட்டிருக்கின்றன. 1911 ஆம் ஆண்டு சரஸ் கால்வாய், பாரிய பூகம்பத்தினை எதிர்கொண்டது. இதன் காரணமாக அங்கே இருந்த நீர், 500 மீற்றருக்கு அப்பால் சென்றது. அண்மையில் நடைபெற்று முடிந்த மத்திய ஆசிய நாடுகளுக்கான நன்னீர் மாநாட்டில் இந்த விடயம் அலசி ஆராயப்பட்ட பொழுது - சரஸ் கால்வாய் கிட்டத்தட்ட 16 மில்லியன் சதுர கி.மீ பரப்பளவு நன்னீரினைக் கொண்டதாகக் காணப்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் ஏற்றுக்கொண்டனர். மத்திய ஆசிய நாடுகளில் மிகவும் வறிய நாடு தஜிகிஸ்தான். ஆனாலும், இங்கே கூடியளவு நன்னீர்ப் பிரதேசங்கள் காணப்படுகின்றன. சில நாடுகள், தம்மிடையே நீரினைப் பகிர்ந்து கொள்கின்றன. அவை தஜிகிஸ்தான், கஜகஸ்தான், உஸ்பெகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகும்.



இதேவேளை, பெருமளவு நீர் - விவசாயத் தேவைக்காகப் பயன்படுகின்றது. அமுதரயா, சியதரய போன்ற ஆறுகள் பாலைவனத்தினூடாகப் பாய்கின்றன. இவற்றின் தாய் உலகத்தின் நான்காவது பெரிய கால்வாயாகிய சரஸ் ஆகும்.



தஜிகிஸ்தான், கிர்ஜிஸ்தான் ஆகிய நாடுகள்- நீர்மின்னுற்பத்தி செய்கின்றன. அதேபோல, உஸ்பெகிஸ்தான், கஜகஸ்தான் போன்ற நாடுகள் மழையை நம்பிப் பயிர் செய்கின்றன.

இப்படியெல்லாம் இருக்கின்ற இந்த நாடுகளினுடைய முக்கிய பிரச்சினையாகிய நன்னீர்ப் பிரச்சினை ஒருமுடிவுக்கு வருதல் மிகவும் கவனிக்கவேண்டியது.

# ஆயிரக்கணக்கானோர் பார்வையில் செவ்வாய்



செவ்வாய்க்கிரகம் கடந்த புதன்கிழமை காலை பூமிக்கு அண்மையில் வந்தது. இதன் காரணமாகப் பிரிட்டிஷ் மக்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுகின்றார்கள்.

இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு, **GMT** நேரப்படி 09.51 இற்கு இடம்பெற்றது. பூமியும் செவ்வாயும் அருகில் வந்தபோது, அவற்றுக்கிடையிலான தூரம் 56 மில்லியன் கிலோ மீற்றர்களாகும். இந்த செங்கோளினை மிகவிசேடமான தொலைநோக்கிக் கருவிமூலம் மக்கள் பார்த்து மகிழ்ந்தனர். இந்த நிகழ்வைத் தவறவிட்டவர்கள்- தம்முடைய வாழ்நாளில் செவ்வாய்க்கிரகத்தினைப் பார்க்கவேமுடியாது.

# நஞ்சை மருந்தாக பாவிக்கலாம்



மனிதர்களுக்கு ஆபத்தைத் தரக்கூடிய நஞ்சுகளை வருங்காலத்தில் மருந்தாகப் பாவிக்கும்நிலை தோன்றியுள்ளது. இயற்கையின் கொடிய நஞ்சாகக் கருதப்படும் "ஆர்சனிக்" (**ARSENIC**) நஞ்சு - புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு அண்மையில் மருந்தாகப் பாவிக்கப்பட்டது. இரத்தப் புற்றுநோய் என அழைக்கப்படும் (**ACUTE Promyelogytic leakoemin**) பாதிக்கப்பட்டவர்களில் நோய்வாய்ப்பட்ட கலங்களை, இந்த நஞ்சு சாதாரணநிலைக்கு மாற்றிவிட்டது. இந்நஞ்சை பரீட்சார்த்தமாக 40 நோயாளர்களுக்குக் கொடுக்கப்பட்டது. 70% மானவர்களுக்கு, அவர்களது புற்றுநோயில் மாற்றம் கண்டிருந்தார்கள். இந் நஞ்சு ஆபத்து மிக்கதாகவும், உயிர் காக்கும் சக்தியைக் கொண்டதாகவும் உள்ளது.

இந்த நஞ்சு பாம்பிலும், ஒரு வகையான நத்தையிலும் காணப்படுகின்றது. உள நோய் தொடர்பான ஆய்வில் ஈடுபட்ட "காமக்கல் மெக்கின்ரோஷ்" 1979 ஆம் ஆண்டு, பாடசாலை மாணவனாகவிருந்த காலத்தில், ஒரு வகையான நத்தைகளில் காணப்பட்ட நஞ்சை ஆராய்ந்தார். இந்நத்தைகள் - மீன்களைச் செயலிழக்கச் செய்வதைக் கண்டு கொண்டார். மேலும் மோர்பைன் (**Morphine**) என அழைக்கப்படும் நோயைத் தடுக்கும் மருந்தை (**pain killer**) விட, நத்தையிலிருந்து கிடைத்த நஞ்சு - மனிதர்களுக்குப் பிரயோகித்தபோது, பல மடங்கு சக்தி வாய்ந்ததாக இருந்ததை அவதானித்தார். மேலும் மனித உடலின் சதைகளுக்கு எதுவித தாக்கத்தையும் கொடுக்காது "நோயை" கொல்வதற்கு உதவியதை அவதானித்தார். இதிலிருந்து இவரது ஆய்வு ஆரம்பமாகியது.

## திரை விமர்சனம்

# திவான்

வெட்டுக் குத்து என்றாலே திருநெல்வேலிதான் பொருத்தமான களம் என்றாகிவிட்ட நிலையில், திவான் கதை சென்னையில் இருந்து ஆரம்பிக்கின்றது.



சரத்குமாரின் படங்கள் என்றால், இரட்டை வேடம் இருக்கும் என்ற நம்பிக்கையைத் திவானும் பொய்யாக்கவில்லை. இலக்கில்லாமல் ஆரம்பத்தில் வாழ்க்கை நடாத்தி கொண்டிருக்கும் பாத்திரம். வீட்டை விட்டு வெளியேறிய ஒரு பெண்ணின் காதலுக்கு உதவநினைக்கும் போது, ஒரு நிலைக்கு வருவதும், அந்த காதல் பொய்யாகிப்போக, அப்பெண்ணை ஆபத்தில்லாமல் கொண்டு சேர்க்கும் பொறுப்பை ஏற்கும்போது, அந்தப் பாத்திரம் பெருமையும் பெறுகின்றது. இதுவே முழுப்படமாகச் செல்லியிருந்தாலும் பாதகம் இல்லை. இந்தப் பாத்திரமாக ஒரு சரத்குமார் வருகின்றார்

சிங்கமடா என்ற பாடல் ஒலிக்க, துரைசிங்கம் என்ற பாத்திரமாக வருகின்றார் இன்னொரு சரத்குமார். பெயருக்கு ஏற்றவாறு நடத்தையிலும், தோற்றத்திலும் ஒரு சிங்கம் போலவே தோன்றுகின்றார். உள்ளூர் எம்.எல்.ஏ.ஜெயப் பிரசாந்ரெட்டிக்குச் சிம்மசொப்பனமாகிறார். தாத்தாவும் பேரனுமாக இரட்டை வேடத்தில் வருவது புதிதாக இருககின்றது. இருவரும் படத்தில் சந்தித்துக் கொள்ளவில்லை என்பது அதைவிடப் புதுமையாக உள்ளது. நடை, உடையில் மின்னல் போன்று வரும் சரத்குமார், முதிய வேடத்தில் வருவது கொஞ்சநேரம்தான். மீதிப்படம் முழுவதும், இளைய சரத்குமாரே வருகின்றார். இளைய சரத்குமார் - நகைச்சுவை, காதல் என்று கலகலப்பைத் தருகின்றார். வடிவேலுவும் கூட்டணி சேர்ந்து, படத்தின் உக்கிரத்தைக் குறைக்கின்றார்.

விசாரணை செய்ய வரும் பொலிஸைக்கூட, வீட்டில் வைத்து, வெட்டித் தள்ளும் வில்லனாக ஜெயப்பிரசாத் ரெட்டி வருகின்றார். வில்லனை அழிப்பதற்குப் பெரியவர் சரத்குமாருக்குக் கொஞ்ச நேரமே ஆகும் என்றும், 'உன் கணவனை என் கையால் கொல்லமாட்டேன்' என்று வில்லனின் மனைவிக்கு முன்னாளில் செய்து கொடுத்த சத்தியம், அவரைப் பல இடங்களில் தடுக்கின்றது. பெரியவர் சரத்குமாரும், வில்லனும் ஒரே ஊரில் வாழ்கின்றபோதும், அன்றைக்குச் சந்தித்துக்கொண்டதுபோல, தங்கள் ஆட்கள் புகழினைப் பேசிக் கொள்ளுதல் எம்.ஜி.ஆர் கால உத்தியாகத் தெரிகின்றது.

படத்தில் இயக்குநரைவிட, அதிக வேலை செய்திருப்பவர் கனல் கண்ணன்தான். தன்னால் முடிந்தளவுக்குச் சரத்குமாரையும் சண்டைக் கலைஞர்களையும் உயரவைத்திருக்கின்றார். ஒவ்வொரு காட்சியிலும் ஐம்பதுக்குக் குறையாத ஆண்கள் வருகின்றார்கள். பதினைந்து, இருபது கார்கள் பறக்கின்றன. ஆக்களுக்கான சாப்பாடு, அரிவாள் செலவும், கார்களுக்கான எரிபொருள் செலவும் ஒரு படத்தையே எடுக்கும் அளவிற்குத் தயாரிப்பாளர் 'சக்தி' படம் முழுதும் தெரிகின்றது. இசையமைப்பாளர் ராஜ்குமார் தன்னால் இயன்ற அளவு இசையுதவி செய்திருக்கின்றார். கதையமைப்பில் சரத்குமாரின் பலம் இருந்திருந்தால், இன்னொரு அரசு அமைக்க உதவியிருக்கும். அப்படி ஒரு கதை அமையும்வரை, அவரது ரசிகர்களை உற்சாகம் குறையாமல் வைத்துவிடும் 'திவான்' ஒரு இடைக்கால. 'அரசு'.

# எதிர்காலம்

அணுவானது ஒரு சொல்லமுடியாத சக்தியாக உலகில் விளங்குவது யாவரும் அறிந்த ஒன்று. அடுத்த தசாப்தத்தில் பிரித்தானியாவின் சகல சக்திகளும் அணுசக்தியாகத்தான் இருக்கும் என்பது பிரித்தானிய அணுஆராய்ச்சியாளர்களின் முடிவு.

நேரடிக் கதிர்த்தொழிற்பாட்டு விளைவானது - எதிர்காலத்தில் பெரும்பாலும் பல சிக்கலைக் கொடுக்கும். இதற்கான காரணம் - பெருமளவு மூலப்பொருள் செலவு இருப்பதனால் ஆகும். நேரடிக் கதிர்த்தொழிற்பாட்டு விளைவின் கழிவிலிருந்து, அணுசக்தி உருவாக்கப்படும்போது, மூலப் பொருள் செலவும் குறையும். ஆனால், இதன்மூலம் மக்களின் பாதுகாப்பு



கேள்விக் குறியானால், அணுசக்தி என்பது ஒரு கனவுதான். ஆனால், யூரேனியததின் கழிவானது-சுலபமாக அணுசக்தியைக் கொடுக்கும் என்பது கேம்பிறிஜ் பல்கலைக்கழக விஞ்ஞானிகளின் முடிவு. ஆனால், இது சாத்தியமானால், யூரேனியத்தின் விலை மிகவும் அதிகரிக்கும் என்பது அவர்களுடைய எதிர்பார்ப்பு. அதனைவிட, புளுட்டோனியம் - அணுசக்தி உற்பத்திக்குச் சாத்தியமான விளைவைக் கொடுக்கும். இருந்தாலும், இதனுடைய கழிவுப்பொருள் மிகவும் ஆபத்தான விளைவினைக் கொடுக்கும். இவை தொடர்ந்து தாக்கத்தில் ஈடுபடக்கூடியவை.

# அணுவை நம்பியா?

ஆனால், அணுசக்தி உலகில் வாழுகின்ற மக்களுக்கு ஒரு மறுமலர்ச்சி ஏற்படும். ஏனெனில், அணுவானது எதிர்காலத்தில் எரிபொருட் செலவைப் பாதியாகக் குறைக்கக்கூடும். தற்போது ஜப்பான், தாய்வான், பிரித்தானியா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் மும்முரமான ஆராய்ச்சியில் ஈடுபட்டுக்கொண்டு வருகின்றன. பெரும்பாலும் 2010 ஆம் ஆண்டளவில் அவை சொந்தமான அணு எரிபொருளைத் தயாரிக்க இருக்கின்றன. ஆனால், கடந்த ஐந்து வருடங்களாக இதைத்தான் சொல்லிக்கொண்டு வருகின்றார்கள். ஆகவே, இது ஒன்றும் சரிவராது என்பது வேறுசிலரின் வாதம். இதற்குப் பெரும்பாலும் அரசியல் தலையீடுகள் இருப்பதுதான் காரணம் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். பிரித்தானிய அரசாங்கம் இதற்காக 4.2 பில்லியன் பவுன்ஸினை, அணு ஆராய்ச்சிக்காகச் செலவழிக்கின்றது. ஆனால், எதிர்காலத்தில் இந்தச் செலவுக்கான, வெற்றி கிடைக்குமா?

# அதிகரிக்கும் வெயிலில்

சுறாக்கள் வெயிலில் வந்து குளிர் காய்கின்றன என்றால், நம்புவீர்களா? இது நடப்பது ஸ்கொட்லண்ட் என்ற நாட்டில். ஏறக்குறைய 37 சுறாக்கள் கரையோரமாக வந்து குளிர் காய்ந்தன, 12 மாதங்களுக்கு முன்னர். ஆனால், இப்போது, 255 பாரிய சுறாக்களாக, அவை பெருகியிருக்கின்றன. வேட்டைக்காரர்களுக்கு இவற்றை வேட்டையாடுவது சுலபம் என்று நினைத்தால், அது தப்பு. ஏனெனில், இவை



# குளிர்காயும் சுறாக்கள்

மிகவும் ஆபத்தானவை. இவை கப்பல்கள், மீன்பிடிக்கும் வலைகள் ஆகியவற்றுக்குச் சேதம் விளைவித்திருக்கின்றன. ஆனாலும், இவற்றின்மூலம் ஸ்கொட்லண்ட் அரசு, ஏறத்தாழ 1.7 மில்லியம் ஸ்ரேலிங் பவுன்களை உழைக்கின்றது. ஆபத்திலும் உழைப்பிருக்கிறது.

# மோட்டோரோலாவின் புதிய கண்டுபிடிப்பு

அமெரிக்க கையடக்கத் தொலைபேசி நிறுவனமாகிய மோட்டோரோலா நிறுவனத்தின் புதிய கண்டுபிடிப்பு சிம்பியன் கையடக்கத் தொலைபேசி, இந்தத் தொலைபேசிகள்






அண்மையில் கண்டு பிடிக்கப்பட்ட கணினி மென்பொருளாகிய லினிக்ஸ் வகையைச் சார்த்தவை. இது தகவல் தொழில் நுட்ப உலகில் ஒரு மைல்கல்லான கண்டு பிடிப்பாக இருக்கும். ஏற்கனவே பலதரப்பட்ட சிம்பியன் கையடக்கத் தொலைபேசிகள் வந்திருந்தாலும், இது எல்லோராலும் விரும்பத்தக்கதாக இருக்கும். ஏனெனில், இந்தத் தொலைபேசியில் லப்டப் கணினி வசதி காணப்படுகின்றது. மற்றும் விடியோ கமரா, ஈமெயில் வசதி ஆகியன காணப் படுகின்றன. எதிர்காலத்தில் கணினி உள்ளங்கைகளுக்குள் வந்துவிடும் என்பதில் ஐயமில்லை.

# லினக்ஸ் கூட்டம்

கடந்த ஆறுமாதங்களாக SCO என்ற கணினி நிறுவனம் - 'லினக்ஸ்' என்ற ஒரு கணினி மென்பொருளினைத் தயாரித்திருக்கின்றது. இந்த மென்பொருளைக் கையாளுகின்றவர்கள் - SCO இடம் அனுமதிப்பத்திரம் பெற வேண்டும். இதனால், என்ன இலாபம்? 1969 ஆம் ஆண்டளவில் கண்டுபிடிக்கப்பட்ட யுனிக்ஸ் என்ற மென்பொருளினைவிட, இது மிகவும் சிறந்ததாகக் காணப்படுகின்றது. லினக்ஸ் - ஆரம்பத்தில் தொலைத்தொடர்புத் தேவைகளுக்குத்தான் பயன்பட்டது. ஏறக்குறைய 30 மில்லியன் லினக்ஸ் இணைப்புகள் காணப்படுகின்றன. ஆனால், அவற்றினுடைய பழுதுகளை SCO கண்டு கொள்வதில்லை. இந்த லினக்ஸ் இணைவு - பெங்குயின் கூட்டத்துக்கு ஒத்தது. ஏனெனில், ஒரு ஒழுங்கமைப்பு



இங்கே காணப்படுகின்றது.

## "உண்மை"

இது உண்மையில் சட்டபூர்வமானதும், இரகசியமானதுமாகும். SCO - ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு இரகசியக் குறியீட்டினைக் கொடுக்கும். இதன்மூலம், அவர்கள் லினக்ஸினைப் பயன்படுத்துவதும், அதிலிருந்து வெளிவருவதும் சுலபமாகிறது.

ஒருவருக்குச் சொந்தமான விடயங்களை யூனிக்ஸ் மூலம் பெறமுடியாது. ஆனால், லினக்ஸ் மூலம் பெறக்கூடியதாக உள்ளது. லினக்ஸ் என்பது கணினி உலகில் ஒரு அற்புதமான கண்டுபிடிப்பு.

# புதிய பரிணாமத்தில் வீடியோ விளையாட்டு

சிறுவர் முதல் பெரியவர்கள்வரை விடியோ கேம் என்றால், ஒரு பைத்தியம். வகைவகையான சத்தங்கள், படங்கள் மூலம், ஒரு கலக்குக் கலக்கிக் கொண்டிருக்கின்றது கண்டுபிடிப்பாளர் யுகம். ஜேம்ஸ் ரூபின் என்ற வல்லுநர் - அண்மையில் பழைய விளையாட்டுக்களை மறந்துவிட்டு, புதிய விளையாட்டுக்களை அறிமுகப்படுத்த வேண்டும் என்பதில் குறியாக இருக்கின்றார். ஆரம்பத்தில் வெறும் காட்டூன் சித்திரங்களாக மட்டுமே காணப்பட்ட விடியோ விளையாட்டுக்கள், அண்மைக் காலமாக நன்கு வடிவமைக்கப்பட்ட படங்கள்மூலம் வருகின்றன.



இவை ஏறத்தாழ 2.75 மில்லியன்கள் அளவில் உலகம் முழுவதும் விலைப்பட்டிருக்கின்றன. இவற்றில் கிரான்ட் தெவ்ட் ஓட்டோ 3, கிரான் திரிஸ்மோ 4 ஆகியன மிகச்சிறந்ததாக உள்ளன. இனிச் சிறுவர்கள்பாடு, கொண்டாட்டம்தான்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்*
*நடுஒரீஇ அல்ல செயின்.*

- திருக்குறள்.

# நமது நோக்கு

## யார் காரணம்?

தமிழ்மக்களுக்கு நியாயமான தீர்வு சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் கிடைப்பதை இந்திய அரசாங்கம் விரும்பவில்லை என்றும் - இத்தகைய உரிமை தமிழ் மக்களுக்குக் கிடைப்பதை கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் குழப்ப முயற்சிப்பதாகவும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்.

இந்தியத் தூதரகத்தின் இந்தக் குழப்ப முயற்சிக்கு, தமிழர் விடுதலைக் கூட்டணியின் சில தலைவர்கள் துணைபோவதாகவும், இவர்களை தூதரகத்துக்கு அழைத்து இந்திய அதிகாரிகள் பேச்சு நடத்தியுள்ளதாகவும் அப்பாத்துரை விநாயகமூர்த்தி குற்றச்சாட்டுகளை முன்வைத்திருக்கிறார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியிலுள்ள சில தலைவர்கள் - இந்தியாவின் தாளத்துக்கேற்ப ஆடுவதாக எழுந்திருக்கும் குற்றச்சாட்டுகள் இப்போதுதான் புதிதாக எழுந்தவையல்ல. நீண்டகாலமாகவே இத்தகைய நிலைதான் நீடித்துவருகிறது.

இந்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் ஈழத் தமிழ் மக்களிடத்தே எத்தகைய கரிசனை கொண்டிருக்கிறது என்று சொல்லித் தெரியவேண்டியதில்லை. ஈழத்தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தினை ஆரம்பத்திலிருந்தே, தனது அரசியல், பூகோள நலன்களை முன்நிறுத்தியே இந்திய அரசாங்கம் பயன்படுத்திவந்தது.

எப்போது தனது கைகளைவிட்டு தமிழ்மக்களின் பிரச்சினை விலகிப்போகத் தொடங்கியதோ அப்போதே இந்தியா தனது உறவுகளையும் மாற்றத் தொடங்கியது. ஆரம்பத்தில் தமிழ்ப் போராளிகளை அரவணைத்து ஆதரவு கொடுத்த இந்தியா, பின்னர் அவர்கள் தமது ஆட்டத்துக்கு ஆடமாட்டார்கள் என்த் தெரிந்ததும் - பொறுத்த நேரம் பார்த்து கைவிட்டது.

பின்னர் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி படையை ஈழமண்ணில் இறக்கிவிட்டது. அதன் பின்னர் நிகழ்ந்த இரத்தம் தோய்ந்த வரலாறும் இந்தியாவுக்கும் கசப்பானதாக இருந்தது. தமிழ்மக்களுக்கு பல்வேறு இழப்புக்கள், துயரங்களை ஏற்படுத்தின.

இந்தக் கசப்பான அனுபவங்களின் தொடர்ச்சியாகவே ஈழத்தமிழர் விவகாரத்தில் இந்திய அரசு நேரடியாகத் தலையிடுவதில்லை என்ற முடிவை எடுக்க நேரிட்டது.

ஆனால், மீண்டும் இந்தியா சமீபகாலமாக எடுத்துள்ள நிலைப்பாடுகள் இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் தலையிடுவதாகவே அமைந்திருக்கிறது. ஆனால், நேரடியான தலையீடுகள் என்ற கட்டத்திலிருந்து விலகி, மறைமுகமானதும், அதேநேரம் வலுவானதாகவும் இந்தத் தலையீடுகள் அமைந்திருக்கின்றன.

இந்தியத் தலையீடுகள் தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் பாதிக்கின்றது என்று ஒருபுறம் இருக்க தற்போது - சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் சூழலில்,

இந்தியா தமிழ்க் கட்சிகள் சிலவற்றை வைத்து வித்தியாசமான நகர்வுகளை எடுக்க ஆரம்பித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த வித்தியாசமான நக்ர்வுகள் எந்தளவுக்கு தமிழ் மக்களுக்கு சாதகமானதாக இருக்கும் என்பதை சம்பந்தப்பட்ட தமிழ்க்கட்சிகள் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

சமாதான முயற்சிகள் மூலம் தமிழ் மக்களுக்கான சுயநிர்ணய அடிப்படையிலான தீர்வு ஒன்று எட்டப்படுவதற்கு இந்தியா தடைக்கல்லாக இருப்பதுதான் உள்ளார்ந்த அர்த்தம் - தமது பிடியிலுள்ள பல்வேறு இனங்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைகளைத் திசை திருப்புவதற்கேயாகும்.

தமது நலன்களை முன்னிலைப்படுத்தி, இந்திய அரசு மேற்கொள்ளும் இத்தகைய நடவடிக்கைகளால் ஈழத் தமிழ் மக்கள் எத்தனையோ தடவைகள் பாதிக்கப்பட்டு வட்டனர். நீண்டகால துயர வாழ்விலிருந்து விடுபடுவதற்காக தமிழ் மக்கள் தமது பலத்தை நம்பி அரசுடன் பேசும் நிலையில், இந்திய அரசாங்கம் அதைக் குழப்பிவிட முயன்றுகொண்டிருக்கிறது.

இந்த நிலை தமிழ் மக்களைப் பெரிதும் வேதனைப் படுத்துவதாகவும், அதேவேளை ஆத்திரம் கொள்ள வைப்பதாகவும் இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இன்னும் இந்திய அரசு தமிழ் மக்களுக்கு மீண்டும் துரோகங்களைச் செய்துகொண்டிருக்கும் நிலையில்- இதற்குத் துணைபோகும் தமிழ்க்கட்சிகளை தமிழ்மக்கள் எப்படி ஏற்றுக்கொள்ளப் போகிறார்கள்?

# இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தூதுவர்களைச் சந்திக்க முடிவு

இலங்கை முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை சர்வதேச மயப்படுத்தும் திட்டத்தின்கீழ், இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் - பிரான்ஸ், அவுஸ்திரேலியா, ஜப்பான ஆகிய நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்களை இன்று சந்தித்துக் கலந்துரையாடவிருக்கிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்களும், கட்சியின் அரசியலமைப்பு விவகாரக்குழுவினரும் பங்கு பற்றவுள்ள இந்தச் சந்திப்புக்கு - கட்சியின் தலைவரும், அமைச்சருமான ரவ,ப் ஹக்கீம் தலைமை தாங்குவார் என அக்கட்சியின் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸனலி தெரிவித்தார்.

இந்தக் திட்டத்தின்கீழ் - அமெரிக்கா, ஜேர்மனி, இத்தாலி, இந்தியா ஆகிய நாடுகளின் தூதுவர்களையும், உயர் ஸ்தானிகர்களையும் சந்தித்து, முஸ்லிம்களின் பிரச்சினைகள் தொடர்பாகத் தெளிவுபடுத்தியுள்ளோம். இந்தச் சந்திப்பின்மூலம், திருப்திகரமான பதில்கள் எமக்குக் கிடைத்துள்ளன.

அதேபோல், ஏனைய நாடுகளின் தூதுவர்களைச் சந்தித்து - இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு, முஸ்லிம்களின் பிரச்சினை என்பன தொடர்பாகப் பேசவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பிரித்தானிய உயர் அதிகாரிகள் யாழ். விஜயம் செய்யவுள்ளனர்

பிரித்தானிய நாட்டின் கன்சவேற்றிவ் கட்சி உயர் அதிகாரிகள் இருவர், எதிர்வரும் 5 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

எதிர்க்கட்சியின் நிழல் மந்திரியான ஆர்.ரி.மிச்சல் அன்ரிகிரம்ற், எம்.பி.லோர்ட் அஸ்கிராபற்ட் ஆகிய இருவருமே வருகை தரவுள்ளனர்.

யாழ். வரும் இவர்கள், அன்றையதினம் காலை யாழ்.அரச செயலகத்தில் வைத்து - அரச அதிகாரிகள் மற்றும் உயரதிகாரிகளையும் சந்தித்து குடாநாட்டு நிலைமைகள் பற்றி ஆராய்வதுடன், பல இடங்களுக்கும் சென்று சுற்றிப் பார்வையிடவுள்ளதாகத் தெரியவருகிறது.

## தேர்தல் ஆணைக்குழுவின் தலைவரை நியமிப்பதில் சந்திரிகா இழுத்தடிப்பு

(கொழும்பு)

சுயாதீனத் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவரை நியமிப்பதற்கு, ஜனாதிபதிக்கு அதிகாரம் இருந்தும், ஜனாதிபதி எந்தவிதமான நடவடிக்கையையும் எடுக்காமல் இருப்பதாகக் கூறப்படுகிறது.

தினேஷ் குணவர்த்தனவின் பெயரை ஜனாதிபதிக்குத் தெரிவித்திருந்தார். ஆனால், ஜனாதிபதியால் நிராகரிக்கப்பட்டார்.

சபாநாயகர் - திரும்பவும் ஒரு பெயரைப் பிரேரித்து, ஜனாதிபதியிடம் கொடுத்தார். சபாநாயகர் பிரேரித்த நபரும் நியமிக்கப்படவில்லை.

இதற்கிடையில் இரண்டு தேர்தல்கள் விரைவில் நடக்கலாம் என்ற எதிர்பார்ப்புக்கள் நிலவுகின்ற இந்தச் சூழ்லில், சுயாதீன தேர்தல் ஆணைக்குவிற்கு ஒரு தலைவர் நியமிக்கப்படாமல் இருப்பது கவலைக்குரிய விடயம் என்று, ஐக்கிய தேசியக்கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் திருமலையில் நேற்று பகிஷ்கரிப்பு

பகுதிநேர ஆங்கில ஆசிரியர் - தம்மை உடனடியாக நிரந்தரமாக்கக்கோரி, பகிஸ்கரிப்பு ஒன்றை செய்துளளனர்.

திருகோணமலையில் அமைந்துள்ள வடக்கு -கிழக்கு மாகாண சபைக்கு முன்னால், நூற்றுக்கும் மேற்பட்ட பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் ஒன்றுகூடி, நேற்று 8 மணி முதல் பகிஸ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இந்தப் பகிஸ்கரிப்பில் கலந்துகொண்டார்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு திருகோணமலை, அம்பாறை, கல்முனை ஆகிய மாவட்டங்களிலுள்ள பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களை நியமனம் செய்யுமாறுகோரி, நேற்று நடாத்தபபட் ஒருநாள் போராட்டம் - தீர்வு கிடைக்காது, சரியான பதில் வழங்கப்படாதவிடத்து, தொடர்ச்சியாக இடம் பெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் கோரிக்கைக்கு ஆதரவாக, இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# நெல்லியடியில் சிறப்புற நடைபெற்ற புலமையாளர் பாராட்டுவிழா!

(நெல்லியடி)

கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தின், கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றம் நடாத்திய புலமையாளர்களின் அறிமுகம், அறிஞர்களைப் பாராட்டிப் பட்டமளித்தல், கூட்டுறவாளர்களைக் கௌரவித்து, ஊக்குவித்தல் ஆகிய நிகழ்ச்சிகள் சிறப்பாக நடந்துள்ளன.

மேற்படி சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளையின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிகளில் - யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, யாழ் மாவட்ட கலை, பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் வளநாடன், தமிழீழ நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் வெ.புஸ்பகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டனர்.

காலம் சென்ற முன்னாள் தமிழ் விரிவுரையாளர் கமலரூபனின் 'ஈழத்துக் கவிதை வரலாறு ஓர் அறிமுகம்', கலாநிதி சோமசுந்தரம்பிள்ளையின் 'கால்நடை அபிவிருத்தி' ஆகிய நூல்கள் இந்நிகழ்ச்சியில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன. புத்தகக் கண்காட்சி, விற்பனை, புலமைப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்க்கு பரிசில் வழங்குதல் ஆகிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## இந்து காலாசார அமைச்சினால் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளை புனரமைக்க பொருட்கள் விநியோகம்!

யாழ்ப்பாண மாநகரசபைக்கு உட்பட்ட சனசமூக நிலையங்கள் ஊடாக, இந்து கலாசார அமைச்சு - யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளைப் புனரமைப்பதற்கெனச் சீமெந்து, சீற் என்பவற்றினை விநியோகித்து வருகின்றது.

மேலும், வறிய குடும்பங்களுக்கு மலசலகூட வசதியினை ஏறபடுத்துவதற்காகப் 'பேசின்களும்' வழங்கப்பட்டு வருகின்றது.

இத்தகைய விநியோகங்களினை - திருநகர் பாரதி சனசமூக நிலையம், சுண்டுக்குளி சனசமூக நிலையம், மத்தியூஸ் வீதி கிறீன் கிங்ஸ் சனசமூக நிலையம், கிறீன் வீல்ட் சனசமூக நிலையம், சென். றோக் சனசமூக நிலையம், குருநகர் சனசமூக நிலையம் என்பவற்றினால் விநியோகிக்கப்பட்டு வருவதினையும், இவற்றினைப் பெற்று, இப்பகுதி மக்கள் உடன் வீடுகளினைப் புனரமைப்பு செய்து வருவதினையும் காணமுடிகிறது.

## முல்லை மக்கள் வங்கியின்பணி மீண்டும் ஆரம்பமாகியுள்ளது!

முல்லைத்தீவு - மக்கள் வங்கிக் கிளை, கடந்த புதன்கிழமை மீண்டும் முல்லைத்தீவு பேருந்து நிலையம் முன்பாக ஆரம்பமாகியுள்ளது.

மக்கள் வங்கி முகாமையாளர் ம.செல்வேந்திரன் தலைமையில் நடைபெற்ற விழா நிகழ்வில், மக்கள் வங்கி வன்னிப் பிராந்திய முகாமையாளர் சிவபாத விருதயர் - கட்டடத்தின் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

1990 ஆண்டு இடம்பெயர்ந்து, புதுக்குடியிருப்பில் இயங்கி வந்த இந்த வங்கி - திங்கள், புதன் ஆகிய இரு தினங்களில் முல்லைத்தீவில் இயங்கும் எனவும், காலப்போக்கில் வாடிக்கையாளர்கள் அதிகரிக்கும்போது, வெகுவிரைவில் முல்லைத்தீவில் நிரந்தரமாக . இயங்கும் எனவும் மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார்.

## இளைஞர்களின் சேட்டையால் மாணவிகள் பெருஞ்சிரமம்!

நுண்கலைப் பீடத்தில் கல்வி பயிலவரும் மாணவிகள் மீது - மருதனார்மடம் சந்தியில், இளைஞர்கள் தொல்லை கொடுப்பதாகத் தெரியவருகிறது. இதனால், பஸ்ஸில் பயணிப்பதற்காகப் பஸ்தரிப்பிடத்தில் மாணவிகள் நிற்பதற்கு, இவர்கள் இடைஞ்சலாக இருப்பதோடு அவர்கள் மது தவறான வார்த்தைப் பிரயோகங்களையும் மேற்கொள்கின்றனர். அத்துடன், இப்பகுதியில் போக்குவரத்திற்கு இடைஞ்சலாகவும் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

# இன்று சிங்கள இனவாதிகளுக்கு வாய்ப்பு முஸ்லிம்கள் என்ன செய்யப்போகின்றனர்?

வெள்ளையராட்சியிலிருந்து இலங்கை விடுதலை பெற்றதும், இலங்கையின் முதலாவது பிரதம மந்திரியாக டி.எஸ்.சேனநாயக்க பதவியேற்றார்.

சுதந்திர இலங்கையின் முதலாவது நாடாளுமன்றம் - 1947 ஆம் ஆண்டில் நடைபெற்றது. நாடாளுமன்றத்தில் சிங்களவருடன், தமிழருக்குச் சமபலம், பிரதிநிதித்துவம் வேண்



டுமென்று வாதாடிய ஜி.ஜி.பொன்னம்பலம் - அதில் வெற்றியீட்ட முடியாமல் போனார். இதன் பின், முதலாவது நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் டி.எஸ்.சேனநாயக்கவின் ஐக்கிய தேசியக் கட்சியை எதிர்த்து, வடக்கு - கிழக்கில் தமது அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் சார்பில் வேட்பாளர்களை நிறுத்தினார். இதில் பெரும்பான்மையான இடங்களைத் தமிழ்க்காங்கிரஸ் பெற்றது.

இப்போதுத் தேர்தல் பிரசாரத்தின்போது, சிங்களவர்கள் மோடர்கள் என்றும், மோட்டுச் சிங்களவர்களுக்கு, அரசியல் ஆட்சி மாண்பு தெரியாதென்றும் - சட்ட நுணுக்கங்கள் சரியாக விளங்காதென்றும், மேடைகளில் ஜி.ஜி.பொன்னம்பலம் முழக்கமிடுவார். இடையிடையே ஆங்கிலத்திலும் சில வார்த்தைகள் பேசி, பின்னர் தமிழிலும் அவர் எடுத்துச்சொல்லுவார். எங்கள் பலம் -பொன்னம்பலம் என்ற முழக்கமிட்டுக் கொண்டு, மைதானத்தில் திரண்டு நிற்கும் கூட்டம், ஜி.ஜியின் பேச்சைக்கேட்டு, கைதட்டி ஆரவாரம் செய்யும். அவர் ஆங்கிலத்தில் சில வார்த்தைகளைப் பேசியதும், அவை விளங்கினாலும், விளங்காவிட்டாலும் - கூட்டத்திலிருப்பவர்கள் கரகோஷம் செய்வார்கள். இவர்களைப் பற்றி ஜி.ஜிக்கும் நன்கு தெரியும்.

ஆனால், டி.எஸ்.சேனநாயக்க போன்ற சிங்களத் தலைவர்கள் - தங்கள் இனத்துக்காக எவ்வளவு தீர்க்கதரிசனத்துடன் திட்டமிட்டுச் செயலாற்றினார்கள் என்பது பின்னர்தான் தெரியவந்தது.

உணவில் தன்னிறைவு காணப்படுவதற்காக, விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்குத் தூர்ந்துபோன குளங்களைப் புனரமைக்கவும், அப்பகுதியில் மக்களைக் குடியேற்றவும் டி.எஸ். சேனநாயக்க திட்டமிட்டார். இத்திட்டத்திற்கு, 'கணிதமூளை' என்று பெயர்பெற்ற அடங்காத்தமிழன் - பேராசிரியர் செ.சுந்தரலிங்கம் உதவிபுரிந்தார்.

கிழக்கு மாகாணத்தில் பூர்வீகமாகத் தமிழ் மக்கள் வாழ்ந்த அல்லை, கந்தளாய்ப் பகுதிகளிலும், கல்லோயாவிலும், பட்டிப்பாளையாறு என்ற தமிழ்ப்பிரதேசத்திலும் - இங்கினியாகல, அம்பாறை என்ற புதிய குடியேற்றத்திட்டங்கள் உருவாக்கப்பட்டன. இப்புதிய குடியேற்றத் திட்டங்களில், தென்னிலங்கையிலிருந்து சிங்களவர்கள், அரசின் உதவியுடன் விவசாய விருத்திக்கெனக் கொண்டுவந்து குடியேற்றப்பட்டனர்.

தனிச்சிங்களக் குடியேற்றம் என்று பெயர் வந்துவிடக்கூடாது என்பதற்காக இப்பகுதிகளில் குறிப்பாக - அம்பாறையிலும், இங்கினியாகலையிலும், கந்தளாயிலும் தமிழ், முஸ்லிம்கள் சிலரைக் குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பெரிய சேனநாயக்க காட்டிய வழியைப் பின்பற்றி, ஆர்.டி.சேனநாயக்க -திருகோணமலையில் சிங்களவர்களைத் திட்டமிட்டு குடியேற்றினார். ஆட்சிக்கு மாறிமாறி வந்த சிங்கள ஆட்சியாளர்கள், கிழக்கில் சிங்களவர்களைத் திட்டமிட்டுக் குடியேற்றி, அவர்களுக்குச் சகல வசதிகளையும் .செய்துகொடுத்தனர். திட்டமிட்டுச் சிங்களவர்களைக் குடியேற்றுவதற்கு வசதியாக, திருகோணமலைக்குச் சிங்கள அரச அதிபர்களையும், அதிகாரிகளையும் நியமித்தனர். இதுவே இன்றுவரை தொடர்கின்றது.

பதவியாக் குடியேற்றத்திட்டம் எவருக்கும் தெரியாமலே, கபடத்தனமாக அரச அதிகாரிகளால் - மோசடியாக உருவாக்கபட்டதாகும். இக்குடியேற்றதிட்டங்களைத் தொடர்ந்து, நியாயமானமுறையில் தமிழர்களைக் குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்த, வவுனியா அரசாங்க அதிபராகவிருந்த இராஜதுரை என்ற அரச ஊழியர், தந்திச் செய்தியின்மூலம் இடமாற்றம் செய்யப்பட்டார்.

பெரிய சேனநாயக்க தொடக்கிவைத்த திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் தொடரப்பட்டு, தமிழ் மண் அபகரிக்கப்பட்டு, அது இன்றும் தொடர்ந்துொண்டிருக்கிறது. திட்டமிட்ட குடியேற்றங்களின் விளைவுதான்., இன்று வடக்கிலிருந்து கிழக்கை தனியாகப் பிரிக்கவேண்டுமென்ற கோரிக்கையும், கூக்குரலிடும் முயற்சியுமாகும்.

இலங்கையின் பூர்வீகக்குடிகளில் ஒன்றான தமிழ் மக்கள், வடக்கிலும்- கிழக்கிலும் வாழ்ந்து வந்தனர். வடக்கும், கிழக்கும் அவர்களின் தாயகமாகும். இப்பகுதியில் வடக்கு, பெரும்பாலும் வரண்ட பிரதேசமாகும். ஆனாலும், இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் ஆழக்கிணறு தோண்டி, புதிய புதிய பாசனமுறைகளைக் கையாண்டு, தோட்டச்செய்கையிலும் பருவமழையைக் கணக்கெடுத்து விவசாயமும் செய்தனர். மிளகாய், வெங்காயம், உழுந்து, பயறு எள் போன்ற உபதானியங்களை, உற்பத்தி செய்வதுடன், காசுப்பயிரான புகையிலையையும் உற்பத்தி செய்தனர். யாழ்ப்பாணத்திலிருந்து மலையாளத்திற்கு வற்றாளைகள், புகையிலைகள் ஏற்றுமதி செய்யப்பட்டது. யாழ்ப்பாணத்திலும் விளைந்த கறுத்தக்கொழும்பான் அம்பலவி, செம்பாட்டான் போன்ற மாம்பழங்களுக்கு, இன்றும் இலங்கையிலும், உலக நாடுகளிலும் பெருமதிப்புண்டு. முயற்சியுடைய யாழ்ப்பாண விவசாயிகள் - மிகச் சமீபத்தில் யாழ்ப்பாணத்திலும் கொடி முந்திரிகை செய்கை பண்ணமுடியும் என்பதை நிரூபித்தனர். இன்றும் யாழ்ப்பாணத்து முந்திரிகைப் பழத்துக்குத் தென்னிலங்கையில் மசுவு அதிகம்.

யாழ்ப்பாணம் - தோட்டச்செய்கையிலும், விவசாயத்திலும், கைத்தொழில்களில் மட்டு



மல்ல நெசவுத்தொழிலிலும் சிறந்து விளங்கிய காலமும் உண்டு.

இவையாவற்றையும்விட, யாழ்ப்பாணத்தான் கல்வியையே பெரும் மூலதனமாகக் கருதினான். அந்நியரின் ஆங்கிலேய மொழியில் திறமைபெற்று, அரச அலுவலகங்களில் அவனே உயர் பதவியிலிருந்து, சிறிய பதவிகள்வரை வகித்தான். நாட்டின் பல பகுதிகளிலும் கல்வி போதிக்கும் ஆசிரியனாகவும் யாழ்ப்பாணத்து ஆசிரியர்களே மிளிர்ந்தனர்.

யாழ்ப்பாணத்தவன் கல்வி, தொழில், விவாசாய முன்னேற்றம் - வடபகுதித் தமிழர் மீது தென்னிலங்கையிலுள்ளவர்களுக்கும், பிறபகுதியினருக்கும் பொறாமையை ஏற்படுத்தியது.

வடக்கு நிலைமை இவ்வாறிருக்க, கிழக்கில் பரந்த நிலப்பரப்பையும் தமிழர்களே பயன்படுத்தினர். வடக்கிலிருந்து கிழக்குடன் உறவு வைத்த தமிழர்களும் வளம்பெற்றனர். இதனால், பிறருக்குப் பொறாமையை ஏற்படுத்தியது. இதேசமயம், வடக்கும் -கிழக்கும் தொடர்ந்து இதே உறவை பேணிவந்ததால், நாட்டின் பிற பகுதிகள் தமிழருக்கு அடிமைப்படவேண்டும் என்ற அச்சம் பிறபகுதிகளிலிருந்தவர்களுக்கு ஏற்பட்டது.

இதேசமயம், 1881 ஆம் ஆண்டில் நாட்டில் முதல் தடவையாக எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டில், கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் பெருமளவிலும், அடுத்து இலங்கை முஸ்லிம்கள் சிறிய தொகையினராகவும், சிங்களவர்கள் சில குடும்பங்கள் என்று சொல்லக்கூடியதாகக்கூட இருக்காததும், தென்னிலங்கையிலுள்ளவர்களுக்கு அதிர்ச்சியளித்தது.

பத்து ஆண்டுகளுக்குப் பின்னர், எடுக்கப்பட்ட குடிசனத்தொகை மதிப்பீடுகளும், அங்கு சிங்களவர் குடியேற்றமும் அதிகரிக்கவில்லை என்பதையே காட்டின. இந்த நிலையில்தான், உணவில் தன்னிறைவு, விவசாய விருத்தி என்ற பெயரில் கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை டி.எஸ்.சேனநாயக தொடங்கினார்.

வடக்கும், கிழக்கும் தமிழர் தாயகம் என்ற பேச்சுக்கே இடமிருக்கக்கூடாதென்பதில், சிங்களப் பேரினவாதிகள் மிகக்கவனமாகச் செயற்பட்டு வந்தனர். டி.டிஸ்.சேனநாயக தொடங்கி வைத்த திட்டமிட்ட குடியேற்றங்கள், தொடர்ந்து ஆட்சிக்கு வந்தவர்களால் மட்டுமல்ல, அரசாங்க உத்தியோகத்தில் இருக்கும் அதிகாரிகளாலும் தொடர்ந்து செயற்படுத்தப் பட்டு வருகின்றன.

வடக்கிலும், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் தொடங்கப்பட்டன. இதை மேலும் தீவிரப்படுத்துவதற்கு - லலித் அத்துலத் முதலி முயற்சி செய்தார். எனினும், அதில் அவர் நினைத்தபடி முன்னேறமுடியாது போய்விடடது.

வவுனியாவில் சிங்களக் குடியேற்றம் திட்டமிட்டபடி ஓரளவு முன்னேற்றம் பெற்றது. முழு வவுனியாவும் சிங்கள மயமாகாமல், மலையகத் தமிழர் பாதுகாத்தனர் என்றே சொல்ல வேண்டும்.

கிழக்கிலங்கையில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் அதிகரித்து வருகின்றதென்பது, 1951 ஆம் ஆண்டளவிலலேயே இலங்கைத் தமிழரசுக்கட்சி எச்சரிக்கை செய்தது. மொழியைவிட, நாங்கள் - எங்கள் தாய் மண்ணைக் காப்பாற்ற வேண்டியது அவசியமாகும், அவசரமும் என எஸ்.ஜே. வி.செல்வநாயகமும், தமிழரசுக் கட்சியரும் -1952 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் பிரசாரக் கூட்டங்களில் எச்சரிக்கை செய்தார்கள். இதை அவர்கள் தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்தினார்களேயொழிய, தமிழர்களை அப்பகுதிகளில் குடியேற்றுவதற்குத் தீவிரமாக முயற்சி செய்யத் தவறிவிட்டனர் என்றே சொல்லவேண்டும்.

வடபகுதித் தமிழ் இளைஞர்கள் -அரசாங்க உத்தியோகத்தில் நாட்டம் கொண்டிருந்தனர். 1958 ஆம் ஆண்டுக்குப்பின், தோட்டச் செய்கையிலும் ஈடுபாடு கொண்டனர். ஆனால், வடபகுதியைவிட்டு, கிழக்கில் சென்று குடியேற்றுவதற்குத் தயக்கம் காட்டினர்.

இன்று? கிழக்கில் திட்டமிட்டுக் குடியேற்றப்பட்ட சிங்கள மக்கள் - அரசின் உதவியுடனும், ஆதரவுடனும் முன்னர் இருந்த தமிழ்க் கிராமங்களைப் புதிய பகுதிகளுடன் இணைத்து, புதிய கிராமங்களுக்குச் சிங்களப் பெயர் சூட்டியிருக்கின்றனர். புதிய புதிய சிங்களக் கிராமங்கள், இப்பகுதியில் உருவாகியிருக்கின்றன, இன்னும் உருவாகிக்கொண்டிருக்கின்றன.

இப்பொழுது வடக்கிலிருந்து கிழக்கைப் பிரிக்கவேண்டும்மென்ற குரல், தெற்கில் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது. நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - கிழக்கைப் பிரிப்பதுபற்றிச் சட்ட வல்லுநர்களுடனும், மற்றையோருடனும் ஆலோசனை செய்து வருவதாகத் தெரிவித்திருக்கிறார்.

1987 ஆம் ஆண்டில் இலங்கையும், இந்தியாவும் செய்துகொண்ட ஒப்பந்தத்தில், வடக்கு - கிழக்கு இணைக்கப்பட்டிருந்தாலும், அதைப் பிரிக்கவேண்டுமென்று சிஹல உறுமய போன்ற இன்வாதக் கட்சிகள் நெருக்கடி கொடுக்கின்றன.

ஒப்பந்தங்கள் ஒன்று சேர்க்கலாம், பிரிக்கலாம் ஆனால், வடக்கும், கிழக்கும் - இரத்தமும சதையுமாக, குடும்பங்கள் குடும்பங்களாக, காலாதிகாலம் தொடக்கம் ஒன்றுபட்டுப் போயிருக்கின்றன. இவர்களை எப்படிப்பிரிக்க முடியும்.

சிங்கள இன்வாதக் கட்சிகள் - கிழக்கைப் பிரிக்கவேண்டுமென்று கூறுவதற்கு, ஆதாரமாக டி. எஸ்.சேனநாயக ஆரம்பித்து வைத்த, திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கிய புதிய கிராமங்களையும், புதிய பெயர்களையுமே சுட்டிக்காட்டுகின்றன. சேருவில என்ற புதிய சிங்களத் தொகுதியே கிழக்கில் உருவாக்கப்பட்டு, இன்று அதுவும் உதாரணமாகக் காட்டப்படுகின்றது.

வடக்கிலிருந்து கிழக்கைப் பிரிக்கவேண்டுமென்பதற்கு, முஸ்லிம் தலைவர்கள் சிலரும் ஆதரவாகக் குரல் கொடுக்கின்றனர். இன்று அவர்கள் சிங்களத் தலைவர்கள் மீது அதிக நம்பிக்கை கொண்டிருக்கலாம்.

ஆனால், அம்பாறையில் முஸ்லிம்கள் வாழ்ந்த பகுதி 'திகவாபி' என்ற பௌத்த புனிதஸ்தலமாக உருவாக்கப்பட்டதை மறந்துவிட்டார்களா?

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத் திட்டங்கள்மூலம், பூர்வீகக்குடிகளான தமிழ்மக்களின்



நிலத்தை அபகரித்துவிட்டு, அது சிங்களப் பிரதேசம் என்று பெரும்பான்மை ஜனநாயகம் உரிமைகொண்டிருக்கிறது. கிழக்கு - வடக்குடன் இணையவேண்டுமா என்று வாக்குக் கணிப்பு நடத்திப் பார்க்கட்டும் என்று சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகள் எழுதத் தொடங்கியுள்ளன. சிங்களவர்களும், முஸ்லிம்களும் தான்- இன்று கிழக்கில் பெரும்பான்மையாக உள்ளனர் என்று இவை எடுத்துக்காட்டுகின்றன.

இவர்களுக்குப் பூர்வீகக் குடிகளான தமிழ் மக்கள் என்ன பதில் சொல்லப் போகிறார்கள்? வடக்கையும், கிழக்கையும் பிரிக்கமுடியுமா?

கிழக்கைப் பிரிக்க டி.எஸ்.சேனநாயகா தொடங்கிய திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் தடையாக இருந்துவிடுமா?

எஸ்.எம்.ஜீ

# கந்தரோடை பிரதான வீதியில் வீதி விபத்துக்கள் அதிகரிப்பு!

## நடைபாதையில் மணல் மற்றும் கற்களைப் பறிக்கின்றனர்

(சுன்னாகம்)

சுன்னாகத்திலிருந்து கந்தரோடை செல்லும் பிரதான வீதியில் வீதியின் அரைப்பங்கிற்கு கற்கள், மணல்கள் கொட்டப்பட்டுள்ளதால் அடிக்கடி வீதி விபத்துக்கள் ஏற்படுவதாக அப்பகுதி மக்கள் கிராம சேவையாளரிடம் புகார் தெரிவித்துள்ளனர்.

வீடு கட்டுவதற்காக பலர் கற்களையும், மணலையும் பறிக்கும்போது, தெருவோரங்களில் பறிக்கிறார்கள். இந்தக் கற்கள் மற்றும் மணல் பரந்து வீதியில் பரவுகின்றது.

இதனால், அந்த வீதி வழியாக வாகனங்களை மக்கள் செலுத்துவதற்கு பெரும் சிரமப்படுகின்றனர்.

அத்துடன் இந்த வீதி மிக ஒடுக்கமாகவும், கழிவுநீர் வாய்க்கால்களுக்கு மிக அருகாகவும் செல்வதாலும், போக்குவரத்திற்கு பெரிதும் இடையூறு ஏற்பட்டுள்ளது.

சுன்னாகம் பஸ் நிலையத்தை அண்மித்துள்ள கடைக்காரர்கள் தமது விளம்பரப் பலகைகள், மூடைகள் என்பனவற்றை பாதை ஓரங்களில் வைக்கிறார்கள்.

சைக்கிள், மோட்டார் சைக்கிள் திருத்துபவர்கள் போன்றோரும் பாதையோரத்தில் வைத்து தமது செயற்பாடுகளை மேற்கொள்வதால், பாதசாரிகளும் வாகனம் செலுத்துவோரும் விபத்துக்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# ஈராக்கில் யுத்த நடவடிக்கைகளால் புஷ்ஷுக்கு உள்நாட்டில் நெருக்கடி!



அமெரிக்காவின் யுத்த நடவடிக்கைகளால், சிதைந்துபோன ஈராக்

கைக் கட்டியெழுப்புவதற்கு 10 பில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவையென ஈராக்கிற்கான அமெரிக்கப் பிரதிநிதி பிறீமர் முன்னர் அறிவித்திருந்தார்.

ஆனால், ஈராக்கில் அதிகரித்து வரும் வன்முறைச் சம்பவங்களால் இந்தத் தொகை மேலும் அதிகரிக்கும் வாய்ப்பிருப்பதாகவும் - இதனால், அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் - தனது கட்சியான குடியரசுக்கட்சிக்குள்ளேயே பலத்த நெருக்குதல்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக்கில், அமெரிக்கா செலவழிக்கும் பணத்தில் 4 பில்லியன் டொலர், அமெரிக்க மக்களின் வரிப் பணத்தில் கிடைக்கின்ற தொகையாகும். இதனால், அமெரிக்க மக்கள் மத்தியில் அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷூற்கு எதிர்ப்புணர்வு தோன்றியுள்ளதை அவதானிக்கமுடிவதாகவும் கூறப்பட்டுகிறது.



கடந்த வெள்ளிக்கிழமை காஸாவில் கொல்லப்பட்ட 8 வயதுச் சிறுமியின் மரணச்சடங்கில் கலந்துகொண்ட அவரது நண்பர்கள் கதறியழும் காட்சி.

# ஈராக் குண்டுவெடிப்பை எவ்.பி.ஐ. விசாரிக்கும்!

(பக்தாத்)

கடந்த வெள்ளிக்கிழமை ஈராக்கில் இடம்பெற்ற கார்க் குண்டுவெடிப்பில், ஷியா முஸ்லிம் தலைவர் உட்பட 95 பொதுமக்கள் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து, அமெரிக்காவின் குற்றப்புலனாய்வுப் பிரிவு விசாரணை ஒன்றை ஆரம்பிக்கப்போவதாக - ஈராக்கிற்கான அமெரிக்காவின் குற்றப்புலனாய்வுத் துறை அதிகாரியான தோமஸ் பியூ வென்ரீஸ் அறிவித்திருக்கிறார்.



பக்தாத்தில் அமைந்துள்ள ஜோர்தானிய தூதரகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கும் கடந்த வெள்ளிக்கிழமை நஜாவ் நகரின் மீது நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலுக்கும் தொடர்பேதும் உள்ளதா என்பதை அறிவதே, இந்த விசாரணையின் முக்கிய நோக்கம் என்று அந்த அதிகாரி தெரிவித்தார்.

குண்டுவெடிப்பு நடந்த இடங்களில் அகப்பட்ட எச்சங்களைக் கொண்டும், கைது செய்யப்பட்ட நபர்களை விசாரிப்பதன் மூலமுமே இந்த புலனாய்வு நடவடிக்கையின் நோக்கம் வெளிப்படும் என்றும்' தெரிவித்தார்.

# காஸா முழுவதையும் கைப்பற்ற இஸ்ரேலிய படைகள் ஆயத்தம்!

## இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

பலஸ்தீன - இஸ்ரேல் பேச்சுக்கள் முறிவடைந்த பின்னர் பலஸ்தீனத்தின் மேற்குக்கரை நகரான காஸா மீது, அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தாக்குதல்களை நடத்தி வந்த இஸ்ரேலியப் படைகள் - காஸா பிரதேசம் முழுவதையுமே ஆக்கிரமிக்கப்போவதாக இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சர் சாகுல் மொபாஷ் அறிவித்திருக்கிறார்.

இதேவேளை -

ஒரு மில்லியன் சனநெரிசலைக் கொண்டுள்ள காஸா பிரதேசத்தைத் தரைத் தாக்குதல் மூலம் கைப்பற்ற முயற்சிக்கும்போது பெரும் சேதங்கள் ஏற்படும் அபாயம் இருப்பதாக அறிவித்துள்ள இஸ்ரேலிய இராணுவ அதிகாரி - கடுமையான நிலை தோன்றும் பட்சத்தில் தரைத் தாக்குதல் மூலம் காஸாவைக் கைப்பற்ற நேரிடும் என்றும் கூறியிருக்கிறார்.

இதேவேளை - நேற்று இஸ்ரேலிய உயரதிகாரிகளைச் சந்தித்த ஐரோப்பிய யூனியன் உயரதிகாரி- இஸ்ரேலுக்கும், பலஸ்தீனத்திற்கும் இடையில் வளர்ந்துவரும் நெருக்கடிநிலையைத் தவிர்த்து இருபகுதியினரும் சமாதானத்தை ஏற்படுத்த முன்வருவார்கள் எனத் தாம் எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

உலகவலம்

## ஹொலிவூட்டின் பிரபல நடிகர் நேற்று மரணம்!

ஹொலிவூட்டின் பிரபல நடிகர் சாள்ஸ் பிரௌன்சன் தனது 81 ஆவது வயதில் நேற்று மரணமானார்.

நிமோனியா காய்ச்சலுக்கு அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர், அங்கு நேற்று மரணமடைந்தார்.

1960 களில் வெளிவந்த 'மக்னிபிசன் 7 டெத் விஸ்' என்ற தொடர் திரைப்படத்தில் நடித்ததன் மூலம் இவர் ஹொலிவூட்டில் பிரபலமாகியிருந்தார்.

1921 ஆம் ஆண்டு பென்சில்வானியாவில் பிறந்த இவர், நிலக்கரிச் சுரங்கத் தொளிலாளியாகவே தன்னுடைய வாழ்க்கையை ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது.

## கொங்கோவில்

# போரை முடிவுக்குக் கொண்டுவர சமாதானப்படையினரும் விரைவு!

கொங்கோவில் அதிகரித்துவரும் யுத்த நடவடிக்கைகளால், அங்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபடச் சென்ற பிரெஞ்சுப் படையினர் - பரவலாக, கொங்கோ புரட்சிப் படையினரின் தாக்குதல்களுக்குள்ளாகி வருகின்றமையால், பிரெஞ்சுப் படையினருக்கு உதவியாக கொங்கோவுக்கு ஐக்கிய நாடுகள் சபையும் படைகளை அனுப்பியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொங்கோவில் 1999 ஆம் ஆண்டில் ஆரம்பித்த சண்டை இன்றுவரை தொடர்வதாகவும் இதில் அகப்பட்டு 50,000 பேர் வரை கொல்லப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை - கொங்கோ போரை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் - கொங்கோவில் உள்ள அனைத்து மாகாணங்களிலும், கொங்கோ புரட்சிப் படைகளுக்கு எதிராக பிரெஞ்சுப் படைகளும், ஐ.நா. படைகளும் தீவிர தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக ஐ.நா. அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார்.

# சீனாவின் படைத் தொகையில் இரண்டு லட்சம் குறைக்கப்பட்டது

உலகிலேயே மிகக் கூடுதலான இராணுவத்தைக் கொண்டுள்ள சீனா- 200,000 இலட்சம் பேரைத் தனது படையிலிருந்து குறைக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

படைக்குறைப்பால், தனது இராணுவ பலம் குறையப்போவதில்லை என்றும் - தாய்வானைக் கைப்பற்றும் தேவைஏற்பட்டால் கூட, தனது படைக்குறைப்பால் எந்தத் தாக்கமும் ஏற்படாது என்று சீன பாதுகாப்புச் சபையைச்சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் படைக்குறைப்பு - சீன இராணுவத்தினரின் சம்பளத்தை அதிகரிக்கவும் அவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய ஏதுவாக அமையுமென்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.


செயல்திறன் அரங்க இயக்கம் நடாத்தும்

சிறுவர் நாடக எழுத்துருவாக்கப் போட்டி

சிறுவர் உளநல மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்டதாக கருப்பொருள் அமைதல் வேண்டும்.

அறிவித்தல்

★ படைப்புக்கள் முன்பு மேடையேற்றப்பட்டதாகவோ, பிரசுரிக்கப்பட்டதாகவோ, போட்டிகளில் பரிசு பெற்றதாகவோ இருக்ககூடாது.
★ 30 நிமிட ஆற்றுகைக்குரியதாக இருக்க வேண்டும்.
★ சிறுவர் பார்வையாளர்களுக்காக எழுதப்படல் வேண்டும்.
★ 12 வயதிற்கு மேற்பட்டவர்கள் பங்குபற்றமுடியும்.
★ படைப்பாளியின் சுயவிபரம் இணைத்தல் வேண்டும்.
★ தகுதிகாண் எழுத்துருக்கள் அனைத்திற்கும் சான்றிதழ் வழங்கப்படும்.
★ தெரிவு செய்யப்பட்ட நாடகங்கள் செயல்திறன் அரங்க இயக்கத்தினால் தயாரிப்பிற்காக எடுத்துக் கொள்ளப்படும்.

முடிவுத் திகதி 25.09.2003

பரிசில்கள்:-

1 ஆம் இடம் ரூ 3000.00
2 ஆம் இடம் ரூ 2000.00
3 ஆம் இடம் ரூ 1000.00

அனுப்பவேண்டிய முகவரி:-
செயல்திறன் அரங்க இயக்கம்
"அருளகம்" ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(சி-1429)



பிற்போடப்பட்டுள்ளது

02.09.2003 இன்று நடைபெறவிருந்த யாழ்.பல்கலைக்கழக மீன்பிடியியல் டிப்ளோமா மாணவர் மன்ற கடலோசை - 04 வெளியீட்டு நிதிக்கான அதிர்ஷ்டலாபச்சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் 16.09. 2003 இற்குப் பிற்போடப்பட்டுள்ளது.

(468) செயலாளர் (4ஆம் அணி)



சமாதானத்தொனி

தீராத வியாதியா?, பில்லி சூனியமா?, கடன் தொல்லையா?, வாழ்க்கையில் தோல்வியா?, பாவ அடிமைத்தனமா?, எதிர்காலத்தைக் குறித்தான ஏக்கமா? வாருங்கள் விடுதலை பெறுங்கள்.

| இடம் | காலம் | நேரம் |
| --- | --- | --- |
| நாற்சதுர சுவிசேஷ சபை<br>நல்லூர் (முத்திரைச் சந்தி)<br>யாழ்ப்பாணம். | புரட்டாதி (செப்டெம்பர்) மாதம்<br>03 ஆம் திகதி (புதன்கிழமை) தொடக்கம்<br>06 ஆம் திகதி (சனிக்கிழமை) வரை | பிற்பகல்<br>4.30 மணி |

தேவ செய்தியாளர்கள்

✚ வண. கலாநிதி லெஸ்லிகீகல் (தலைவர் இலங்கை நாற்சதுர சுவிசேஷசபை)
✚ வண. கலாநிதி கிம்ஹொக் (சுவிசேஷகர் சிங்கப்பூர்)

குறிப்பு

04.09.03 (வியாழக்கிழமை) தொடக்கம் 06.09.03 (சனிக்கிழமை) வரை தினமும் காலை 9 மணி தொடக்கம் - மதியம் 12 மணிவரை விசேட வேதப்படிப்பு நடைபெறும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

தொடர்பு: நாற்சதுர சுவிசேஷச சபை

673 (241) பருத்தித்துறை வீதி (முத்திரைச் சந்தி) நல்லூர் T.P No: 021-222-6730, 077 6042899

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் வெகுஜன போராட்டம்!

## அமைச்சர் மகேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக நாடாளுமன்றில் கண்டனக் குரலொன்றை எழுப்பவுள்ளதாகவும், வெகுஜனப் போராட்டம் ஒன்றினை மக்கள் ஆதரவுடன் யாழ்ப்பாணத்தில் நடத்தவுள்ளதாகவும் - இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் கூறியுள்ளார்.

இப்பிரச்சினை தொடர்பாக மிக விரைவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை, யாழ்.மாவட்ட பிரதேச செயலாளர்கள் மற்றும் இராணுவத் தளபதிகள் ஆகியோருடன் சென்று சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாகவும், சிறந்த தீர்வொன்று கிடைக்காத பட்சத்தில் இந்த வெகுஜனப் போராட்டம் நடைபெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

உயர்பாதுகாப்பு வலயத்தினை விட்டு இராணுவத்தினரை வெளியேறக்கோரி மக்கள் ஒன்றுதிரண்டு பல மறியல் போராட்டங்களையும் நடத்தியும், மகஜர்கள் பலவற்றை கையளித்தும் - இதுவரை எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### மன்னாரில் முன்னேற்பாடாக

# பொங்குதமிழ் நிகழ்வு விழாக்குழு அமைப்பு!

(மன்னார்)

மன்னாரில் அடுத்த மாதம் நடக்கவிருக்கும் பொங்கு தமிழ் நிகழ்வுக்கான ஏற்பாட்டுக் கூட்டம் நேற்று மன்னாரில் இடம்பெற்றது.

மன்னார் வை.எம்.சி.ஏ மண்டபத்தில், நேற்றுக்காலை பத்து மணிக்கு நடந்த இந்தக் கூட்டத்தில், பொங்கு தமிழ் விழாக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்திலுள்ள பல் கலைக்கழக மாணவர்களே இந்த விழாக்குழுவில் இடம்பெற்றுள்ளனர். (201)

# நாடு முழுவதிலுமுள்ள ஆசிரியர்களில் 30 வீதமானோர் லீவில் செல்கின்றனர்!

(கொழும்பு)

நாடு முழுவதிலும் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் - ஒரு லட்சத்து 93 ஆயிரம் ஆசிரியர்களில், 30 வீதமானோர் நாளாந்தம் விடுமுறையில் செல்வதாக - கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பிரசித்தி பெற்ற பாடசாலை ஒன்றில் - ஒரே நாளில் 60 ஆசிரியர்கள் விடுமுறைக்கு விண்ணப்பித்த சம்பவம் ஒன்று ஏற்பட்டதாகவும் அவர் கூறினார்.

பத்தரமுல்லைப் பகுதியில் சில பாடசாலைகளுக்குப் பயிற்சிப் புத்தகங்கள் வழங்கும் வைபவத்தின் போதே - அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் நேற்று மாகாண கல்வியமைச்சு முன் மறியல்!

வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளில் பகுதிநேர ஆசிரியர்களாக கடமையாற்றும் ஆசிரியர்கள் திருமலையிலுள்ள மாகாணக் கல்வி அமைச்சின் அலுவலகம் முன்பாக நேற்று மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை 7 மணியளவில் மாகாணக் கல்வியமைச்சின் முன்பாக திரண்ட நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் கடமைக்கு வந்திருந்த ஊழியர்கள் உட்செல்லமுடியாது திரும்பினர்.

அலுவலகத்திற்கு ஊழியர்களை செல்லவிடாது தடுத்து நிறுத்தியமையால் நேற்றையதினம் அலுவலகத்தின் அனைத்து செயற்பாடுகளும் செயலிழந்தன.

இந்த மறியற் போராட்டத்தில் கலந்துகொள்வதற்காக வடக்கு - கிழக்கிலுள்ள பாடசாலைகளைச் சேர்ந்த பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் - திருகோணமலைக்குச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (01)

## யு.என்.எச்.சி.ஆர் அதிகாரிகள்

# மல்லாகம் அகதிமுகாம் தொடர்பாக யாழ். அரசாங்க அதிபருடன் பேச்சு!

மல்லாகத்திலுள்ள 'நீதிவான் இடம்பெயர்ந்தோர் முகாம்' தொடர்பாக - யு.என்.எச்.சி.ஆர் பிரதிநிதிகள், மனித உரிமைகள் ஆணைக்குழுவின இடம்பெயர்ந்தோருக்கான செயற்திட்ட அதிகாரி வேழினி ஆகியோர் - யாழ். மாவட்ட அரச அதிபருடன் கலந்துரையாடியுள்ளனர்.

மல்லாகத்திலுள்ள மேற்படி முகாமில் - 53 குடும்பங்களைச் சேர்ந்த அகதிகள் இடம்பெயர்ந்த நிலையில் வாழ்ந்துவருகின்றனர். ஆனால், அந்த முகாம் அமைந்திருக்கும் காணி-தனியார் ஒருவருக்குச் சொந்தமானதால், அம்முகாமிலுள்ள மக்களை வெளியேறும்படி, காணி உரிமையாளர் கோரியுள்ளார்.

இது தொடர்பாக- அந்த முகாமிலுள்ள அகதிகளை, வசாவிளானிலுள்ள ஓர் இடத்தில் குடியேற்றுவதெனத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால், முகாம் அமைப்பதற்கு தெரிவுசெய்யப்பட்ட இடம் உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசத்திலிருந்து மிக அண்மையில் உள்ள இடமென தெரியவருகிறது. இதனால், அந்த அகதிகளை மீளக்குடியேற்றுவது சாத்தியமா என ஆராய்வதற்கே யாழ். அரச அதிபரை இவர்கள் சந்தித்துப் பேசியுள்ளனர்.

## நாவாந்துறையில் வீட்டுத்திட்டம்

நிகொட் அமைப்பின் வேலைத் திட்டத்தின் கீழ், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் - நாவாந்துறையில் வீட்டுத்திட்டமொன்றை அமைத்து வருகின்றனர்.

தலா 75 ஆயிரம் ரூபா பெறுமதியான - 130 வீடுகள் இவ்வாறு அமைக்கப்படுவதாக தெரியவருகிறது. இதன்மூலம், வீடற்றவர்களாக வாழ்ந்துவரும் மக்கள் நன்மையடைவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## பண்டாரிகுளத்தில் இராணுவ முகாம் அமைப்பு

வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் - இராணுவத்தினர் புதிய படைமுகாமொன்றை அமைத்துவருகின்றனர்.

இப்படைமுகாம் அமைக்கப்படுவதன் காரணமாக மக்கள் அச்சமடையத் தொடங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே, அண்மையிலுள்ள வைரவப்புளியங்குளத்தில் ஒரு படைமுகாம் இருப்பது குறிப்பிடத்தக்கது.

முதலாம் ஆண்டு நிறைவையொட்டி

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்
நடாத்தும்

பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி

*உயர்தரப் பிரிவு* - (க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்கள்)

*தலைப்பு* - '21 ஆம் நூற்றாண்டில் அறிவியலின் வளர்ச்சி'

முதலாம் பரிசு - ரூபா 3,000
இரண்டாம் பரிசு - ரூபா 2,000
முன்றாவது பரிசு - ரூபா 1,000

*கீழ்ப் பிரிவு* - (க.பொ.த. சாதாரண தரமும் அதற்குக் கீழ் கற்பவர்களும்)

*தலைப்பு* - 'சூழல் மாசடைதலைத் தடுப்பதில் நமது பங்கு'

முதலாம் பரிசு - ரூபா 3,000
இரண்டாம் பரிசு - ரூபா 2,000
முன்றாவது பரிசு - ரூபா 1,000

நிபந்தனைகள்

✧ கட்டுரைகள் சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும்.
✧ கட்டுரைகள் அனுப்பும் போது பாடசாலையில் கற்கும் தரம் குறிப்பிடப்பட்டு, அதிபரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
✧ கட்டுரைகள் ஆகக் குறைந்தது 300 சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
✧ கட்டுரைகளைத் தேர்ந்தெடுப்பதில் நடுவர்குழுவினது. ஆசிரியரின் முடிவே இறுதியானது.
✧ கட்டுரைகள் "நமது ஈழநாடு" 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

போட்டி முடிவுதிகதி - 10.09.2003

# தொழிற்சங்க நடவடிக்கைகளில் அனைத்து கட்சிகளும் இணையும்!

(கொழும்பு)

நாட்டில் நடைபெறுகின்ற தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சிகள் இணைந்து குரல் கொடுப்பது என முடிவு செய்துள்ளன.

நேற்று கொழும்பில் நடைபெற்ற எதிர்கட்சிகளில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் விசேட கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுகின்ற தொழிற்சங்கப்பிரதிநிதிகளை அரசு நசுக்கி வருகின்றது.

இதனால், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் முன்வைக்கும் யோசனைகளை நடைமுறைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

## கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதியின் செயற்பாடுகள் இடைநிறுத்தம்!

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி குமார எக்கரட்ண, நீதிமன்ற செயற்பாடுகளிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

கொழும்பு சட்டக்கல்லூரியில் நடைபெற்ற மாணவர் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில், கல்லூரியில் கல்விகற்கும் அவரது மகன் தலைவராகத் தெரிவு செய்யப்படவேண்டும் என்பதற்காக, சாதகமாக நடந்துகொண்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டதையடுத்தே, தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்துள்ளதாக நீதிச்சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

# மீசாலையில் நடைபெற்ற நினைவஞ்சலிக் கூட்டம்

சுகயீனம் காரணமாக சுவிற்சர்லாந்தில் சாவடைந்த நாட்டுப்பற்றாளர் மார்க்கண்டு கருணாநிதியின் நினைவஞ்சலிக் கூட்டம் - நேற்று மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

முன்னதாக, இவரின் திருவுருவப் படம் அன்னாரது வீட்டிலிருந்து நினைவஞ்சலி நடைபெற்ற மண்டபத்திற்கு ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது. அதனைத் தொடர்ந்து நினைவஞ்சலிக் கூட்டம் ஆரம்பமாகியது.

சாவகச்சேரி கோட்ட பொறுப்பாளர் தமிழ்மாறன் தலைமையில் நடைபெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில் - பொதுச்சுடரினை தென்மராட்சி கோட்ட பொறுப்பாளர் கலைவாணன் ஏற்றினார். நினைவுரைகளை பாடசாலை அதிபர் கந்தசாமி, உலகத் தமிழர் ஒருங்கிணைப்பு கல்விச்சேவை சுவிஸ் கிளைப் பொறுப்பாளர் விஜயகுமார் ஆகியோர் ஆற்றினார். சிறப்புரையினை யாழ். மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் ஆற்றினார்.

இந்த அஞ்சலி நிகழ்வில் போராளிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (29)

## மின்சாரம்....

இவரின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டு மரண விசாரணையின் பின் நேற்று மாலையே உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ரா,111)

## சீமெந்து...

கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நீண்டகாலம் சீமெந்து தொழிற்சாலையில் பணிபுரிந்த இவர்களின் சம்பளம் நிறுத்தப்பட்டதால் பாதிப்படைந்துள்ளனர்.

# நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 98.60 | 97.00 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 151.94 | 153.53 |
| 1 யூரோ | 105.39 | 107.03 |
| 1 சுவிஸ் பிராங் | 68.50 | 69.71 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 61.25 | 62.60 |
| 1 ஜப்பானிய யென் | 00.82 | 00.84 |
| 1 சவூதி றியால் | 23.31 | 23.31 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 02.09.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.